இவர்கள் வடகரைப் பாளையத்தின் நாயகர்களாயிருந்தனர். பின்னர் இவர்கள் அரசியல் மாற்றங்களின் நிமித்தம் தங்கள் பாளையத்தின் தலைநகரை சொக்கம்பட்டிக்கு மாற்றிக்கொண்டனர்.[17] இத்தலைநகர் மாற்றம் 1767-ஐ ஒட்டி நடந்ததாக கால்டுவெல் அவர்கள் தமது திருநெல்வேலி சரித்திரத்தில் குறிப்பிடுகிறார்.

---

10. Tinnevelly District Gazetteers 1917 By HR PATE I.C.S. —P. 458.

11. The Tinnevelly District Gazetteers By : HR. PATE 1917—P. 56 (Malik-Kafur—Invasion—1307—1311 A.D.) vide also History of Indu By EW Thompton —P. 129.
12. Ibid—P. 458.
13. See —P. 3.
14. Papers relating to Poligars wars—Tinnevelly District 1801—P. 27.
15 Ibid—P.27.

16 Papers relating to Poligars wars—Tinnevelly District—1801—P.27.
17. The Tinnevelly District Gazetteers By Mr. PATE I.CS 1917 Page 454 (Foot see note).

மரபின் தொடக்க வரலாறு :

திருடர்கூட்டத்தை அடக்கி காவல்பணி ஏற்றது கி.பி. 1458 ஆம் ஆண்டில் நடந்தது என்பார்கள்.[18] அப்போது காவல் தலைவனாக இருந்தவன் செம்புலி சின்னணைஞ்சித்தேவன். இவனது காலம் கி.பி. 1459—1606 வரையாகும்.[19] அடுத்த வாரிசும் இதே பெயரினன்தான். கி.பி. 1607-ல் காவல் தலைவனானான்.[20] இவன் கி.பி. 1654 வரை, அதாவது 47 ஆண்டுகள் காவல் காத்துவந்தான் என்பர்.

பிறிதொரு பரம்பரை :

மேற்குறிப்பிட்ட செம்புலியையும் அவனது வழியினரையும் வேறுபடுத்தும் வாயிலாக பிற்காலத்தில் (3—11—1755-இல்) வலங்கைப்புலி வெள்ளையத் தேவன் என்பவன் வெள்ளையர் அரசுக்கு இந்தப் பாளையத்துக்கு சொந்தக்காரர் தாமே என உரைத்து, அதற்கு சான்றாக தம் மூதாதையர்கள் குறித்த அறிக்கை ஒன்றையும் அளித்தான். அதில் தாம் கொண்டயங்கோட்டை மறவர்கள் வழியினர் எனக்கூறி அதற்கான வாரிசுரிமைப் பட்டியலையும் அளித்து, தாங்கள் மதுரைப் பாண்டிய அரசர்கள் கால முதல் தங்கள் மூதாதையர் சொக்கம்பட்டியை ஆண்டு வந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளான்.[21]

மேலும் சின்னணைஞ்சித் தேவன் முதலானோர் தங்களின் மூதாதையர் வழியில் முறைகேடாகப் பிறந்தவர்கள் என்றும் கூறியுள்ளான். சொக்கம்பட்டியை, மைனர்கள் (பாலவயதினராக) பொறுப்பில் இருந்தபோது மேற்படியார்கள்(பாளையத்தைக்) கவர்ந்து கொண்டார்கள் என்றும் தெரிவித்துள்ளான். இந்தப் பரம்பரையில் வந்த வெள்ளையத்தேவன் என்ற வலங்கைப்புலியேதான் ஒழுங்குப்படுத்துச் சட்டப் பிரயோகத்தைத் தவறான வழியில் தம்மீது செலுத்தியுள்ளதாக கூறி தம்மை விடுவிக்குமாறு கோரினான்.[22] இந்த இரு சாராரின் வாரிசுரிமைப் பட்டியல்களைக் கீழே காணலாம். மும்முல்லாப்பட்டி : முருகப்பட்டி சொக்கம்பட்டி வடகரை என்றழைக்கப்பட்ட பாளையப்பட்டின் பிரதான வாரிசுதாரர்களின் (கொண்டங்கோட்டை மறவர்) மரவு வழிப்பட்டியல் (வலங்கைப் புலி வெள்ளையத்தேவன் மரபு வழிப் பட்டியல்) :

வலங்கப்புலித்தேவன்
|
(இரண்டு மக்கள்).

ஹரிதாசவலங்கப்புலித்தேவன் (இளையமகன்)	பெரியசாமித்தேவன் (மூத்த மகன்)
|	|
பெரியசாமித்தேவன்	வலங்கப்புலி வெள்ளையத்தேவன் (1795) (இவனே 1891 ஆம் ஆண்டு ஒழுங்குப்படுத்துச் சட்டத்திற்குக் கேள்விக் குறியிட்டவன்).
|	|
வள்ளிநாயகத் தேவன்	வலங்கைப்புலி பெரியசாமித் தேவன்
	|
	கருணாலய வலங்கைப்புலித் தேவன் (1859)[23]

குறிப்பு:

இப்பரம்பரையினர் பற்றி 1745-க்குப் பின்னும் 1859 வரையிலுமான தலைமுறை பிசகாமல் குறிப்புகள் கிடைத்துள்ளன. ஆனால் 1745-க்கு முன்னர் உள்ள விவரங்கள் கிடைக்கப் பெறவில்லை. சிங்கம்பட்டி ஜமீன்தார் அளித்த தனியார் ஆவணங்களிலோ இதுவரை அச்சிடப்பட்ட மெக்கன்சி தொகுப்புகளிலோ இக்குறிப்புகள் காணப்படவில்லை.

---

18. Papers relationg to Poligars Wars—Tinnevelly District 1801—P. 27
19. Ibid —P. 27.
20. Ibid—P. 27.
21. Papers relating to poligars Wars Tinnevely district. 1801—P28.
22. See—P. 1.
23. Papers relating to Poligars Wars— Tinnevely District 1801—P 28.

செம்புலி சின்னைஞ்சித்தேவன் வகையறா மரபுப்பட்டியல் இவன் காலம் 1459—1606 என்று கூறப்பட்டுள்ளது. அவனுக்கு அடுத்து வந்த மரபினர் பட்டியல்[24].

சின்னெஞ்சித்தேவன்
(1607— 1654)

மகன் சிவனாண்டித் தேவன்
(1655—1676) (22 ஆண்டுகள்)

மகன்
பெரியசாமித்தேவன் (பெரியசாமி செம்புலி சின்னைஞ்சித்தேவர்*
(1677-1726—49 ஆண்டும்) (கி.பி. 1660-1721)

சின்னப்பட்டம் இராசகோபாலத்*
தேவர் (1660—1721)

*(குற்றாலம் விசுவநாதர் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் வைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைகள் மீதான காலக் குறிப்புகள் படம் காண்க).

இரண்டு மக்கள்

(ஒருவன் தந்தைக்கு முன்பே மரணமெய்தினான்).

சிவராமத் தேவன் (குழந்தை) 1727 (1 ஆண்டு 1 மாதம்)பட்டம் பெற்றதும் மரணம்— இவனது மைத்துனன் பெரியசாமித்தேவன் (1728—1744).
(வாரிசு இன்றி இறந்தார்)

காளத்தியப்பத்தேவன்
(1744—1751—(7 ஆண்டுகள்).
(இவன் தந்தை சங்கர குமார தேவன்)

இவரது மகன் மீண்டும் ஒரு சின்னைஞ்சித்தேவன் (என்ற பெயரில்).
(1752-1760 (8 ஆண்டு 3 மாதம்)

பெரியசாமித்தேவன்
(1765—1782)

(இவர் தமது பிரதானி முதலமைச்சராக இருந்த சவரிபெருமாள் பிள்ளையைத் — தாக்க அதன் விளைவாக யூசுப்கான் வசம் இப்பாளையம் 1764 வரை இருந்தது என்பார்கள்([24]a)

குறிப்பு :—இந்த மரபுப் பட்டியல் 1607— முதல் 1825-ம் ஆண்டு வரை மட்டுமே. இதற்கே ஆவணங்கள் உள்ளன.

தென்னகத்தின் நிலையும்—பாளையப்பட்டுகளின் போக்கும் :

ஜெ. டால்பாய் வீலர், "The Early Records of East India என்ற தம் நூலில் மொகலாயரின் தென்னகப் படையெடுப்புக்கு முன்னர் இருந்த தமிழகத்தையும் அதற்குப் பின்னர் இருந்த தமிழகத்தையும் ஒரு சிறு உதாரணத்தில் எடுத்துக் காட்டினார். மொகலாயர் வருமுன்னர் தெக்காணத்தில் விவசாயம் ஒழுங்காக நடந்தது. மக்கள் தங்கள் தொழிலைக் கவனித்துக் கொண்டு சிறிய வாழ்க்கை வாழ்ந்தார்கள். விளைச்சல் பெருக அவர்கள்— நீர்ப்பாசன ஏரிகளையும், குளங்களையும் பாதுகாத்து அவைகளை மராமத்து செய்து அவ்வப்போது கண்காணித்துக் கொண்டிருந்தனர். நீர்வளம் இல்லையேல் வாழ்வும் இல்லை என்பதை நன்குணர்ந்து அதனால் தொழிலைக் காக்கும் ஏரி குளங்களை சீர்திருத்தி நன்முறையில் வைத்திருந்தனர்.[25].

24. Papers relating to Aligars wars—Tinnevelly District 1801—P. 27.
24.(a) Papers relating to Aligars Wars—Tinnevely District 1801—P 27.

25. The daily reco [illegible] India by J. Ta[illegible]s Wheeler.

அதனால் முகலாயர் வருகைக்குப் பின்னர் மக்களின் போக்கும் ஆளும் அதிகார வர்க்கத்தின் போக்கும் மாறவே நிலத்தையும்; நீர் நிலைகளையும் அழித்தே விட்டுவிட்டனர். பயிர்களும் விளையவில்லை. குளங்கள், ஏரிகள் தூர்த்துப் போனதால் தண்ணீர் வீணே போயின. பஞ்சமும் வறுமையும் சூழ வாழ்வும் வளமும் அவர்கள் இழந்து போயினர் எனலாம். இதுவே அக்காலத்திய நிலை 11-ஆம் நூற்றாண்டுக்கு பின்னிருந்தே இந்த நிலை நம் தமிழகத்தை பிடித்துக் கொண்டிருந்ததை தவிர்க்கவியலவில்லை. இதனால் மக்கள் பிழைப்பை நாடி இடம் விட்டு இடம் போய் குடித்தனம் செய்யவும் வாய்ப்பானது. நிலையான ஆட்சியாளர்கள் இல்லாத நிலையும் உருவானது. இப்போது மதுரை நாயக்கர் ஆட்சியாளர்களிலிருந்து மாறிய பாளையப்பட்டு வரலாற்றைக் காணலாம்.

மதுரையில் நாயக்கர் வமிச ஆட்சிக்கு இராணி மீனாட்சியின் (1736) அகால மரணத்துடன் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.[26] இக்காலத்திலே ஆற்காடு நவாபுகள் தங்களின் எதிரெதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வெள்ளையர்களும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆற்காடு நவாபான முகமதிலிக்கு உதவி புரிய முன் வந்தனர். மற்றொரு ஆற்காடு நவாபான சந்தாசாகிப்புக்கு பிரஞ்சு நாட்டு ஏஜெண்டுகள் உதவி அளித்தனர். அதிகார மோகம் எல்லோரையும் ஆட்டிப்படைத்தது. 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஏற்பட்ட ஆட்சிக்குழப்பங்கள் பல. இரு ஆற்காடு நவாபுகளின் ஏஜெண்டுகளான ஆலம்கான், மாபூஸ்கான், யூசுப்கான், வெள்ளையர்களின் படைத்தளபதிகளான ஹெரான், கூப், இன்னிஸ் போன்றவர்கள் நெல்லை மாவட்டத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் 1764 ஆம் ஆண்டுக்குப் பிறகு வெள்ளையர் மற்றும் ஆற்காடு நவாப் முகமதலியின் கரங்கள் வலுப்பெற்றன. இதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவன் யூசுப்கான் 1760 முதல் 1763 [27] வரை அவன் மேற்கொண்ட ஆங்கிலேயர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் யாவும் அவனது மரணத்துக்குப் பிறகு வலிமை குன்றிப்போயின.[28] இதனால் தெற்கே வெள்ளையர்களுக்கோ, ஆற்காடு நவாபிற்கோ, எதிரிகள் இல்லாமல் போய்விட்டனர். இதனால் முகமதலியின் ஏஜெண்டுகளின் கையில் நெல்லை மாவட்டத்தின் பாளையங்கள் சிக்கின.[29]

சின்னணஞ்சித்தேவன் 1760 இல் பதவி விலக்கப்பட்டு சிறையில் இருந்து மரணம் அடைந்ததாகத் தெரிகிறது[30]. இவர் நெல்கட்டரின் செவ்வல் புலித்தேவரின் குறிப்பிடத்தக்க நண்பர்களில் ஒருவர் என ஆராய்ச்சியாளர் நா. ராசய்யா அவர்கள், தமது ''இந்திய விடுதலைப்போரின் முதல் முழக்கம்'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அவரது மகன் பெரியசாமித் தேவன் 1767 முதல் 1782 முடியஆண்டதாகவும் இவனது மகன் மீண்டும் சின்னணஞ்சித் தேவன் என்ற பெயரில் இப்பாளையத்தை ஆண்டதாகவும் தெரிய வருகிறது. பெரியசாமித் தேவன் (1767-1782) காலத்தில் ஒரு வாரிசுரிமைப் போர் நடந்ததாகத் தெரிகிறது[31].

1765-இல் வடகரைப் பாளையக்காரன் பெரியசாமித் தேவன் மேற்குப் பாளையங்களின் கூட்டணியை உருவாக்கி ஆங்கிலேயர் மற்றும் நவாபுகளையும் எதிர்க்கத் துணிந்தார். ஆனால் உள் நாட்டுக் குழப்பத்தால் இது நிறைவேறாமல் போனது என்று 'மறவர் சரித்திரம், என்ற நூலில் டாக்டர் கதிர்வேலு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

முன்பே குறிப்பிட்டுள்ளபடி. கொண்டயங்கோட்டை மறவர் வழியில் 1782 முதல் 1787 வரையிலான காலத்தில்

1. வெள்ளையத் தேவன் (இவரது மகன்)
2. வலங்கப்புலி பெரியசாமித் தேவன்.
3. வெள்ளையத் தேவன் மாமன்.

ஹரிதாச வலங்கப்புலித்தேவன் இவரது மகன் பெரியசாமித் தேவன் – இவரது மகன் வள்ளிநாயகத் தேவன் ஆகியோர் ஆண்டு வந்துள்ளனர். இவர்கள் யாவரும் சிவகிரி பாளையத்துடன் பின்னாட்களில் சேர்ந்து கொண்டனர் என்றும் தெரிகிறது.[32]

---

26. Tinnevelly District Gazetteer HR, Pate IC.S. —p 65
27. Rebel Commandant—Yousuff Khan By S.C. Hill
28. Ibp (Yousuff was captured aidhonged on 14h October 1764).
29. S. Lushington, Report on Tinnevelly 1802)—p. 3
30. Papers relates to Poligars wars—Tinnevelly District 1801—p 27.
31. Ibid.
32 Papers relating to Poligars was Tinnevelly District. 1801—P 8.

பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரின் சொக்கம்பட்டி முற்றுகை :

கி.பி. 1783-இல் கர்னல் புல்லர்டோன் பாஞ்சாலங்குறிச்சியை முற்றுகை யிட்டு[33] அங்கு டச்சுக்காரர்களிடம் அப்பாளையக்காரர் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் மூல நகல்களையும் 4,000 ஸ்டார் பகோடா பணத்தையும் ஆயுதங்களையும் கைப்பற்றிய போது அந்தப் பாளையக்காரர் சொக்கம்பட்டி கோட்டையில் முற்றுகை நடத்தி கொண்டிருந்தார். இத்தருணத்தில் பெரியசாமித்தேவன் இப்பாளையத்தை ஆண்டிருக்க வேண்டும். இதனால் பாஞ்சாலங்குறிச்சியில் இறுதியாக நடந்த போரில் சொக்கம்பட்டிபாளையம் ஆங்கிலேயர்களுக்கு உதவியாகத் தெரியவருகிறது.

கி.பி. 1787 இல் சொக்கம்பட்டியில் ஒரு கோட்டை[34] கட்ட அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நவாப்பின் பவுஸ்தர் இதை எதிர்த்து அ பாளையத்தைக் கைப்பற்ற பாளையங்கோட்டை கமாண்டருக்குத் தெரிவித்தார். கோட்டை முழுவதும் கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. இன்னும் நெடுஞ்சுவராகவே உள்ளது. இக்கோட்டையின் அமைப்பு.

வடகரைப் பாளையம் :

வடகரையும் சொக்கம்பட்டியும் வேறு வேறு ஊர்களானாலும் ஒரே பாளையமாகவே கருதப்பட்டு வந்திருக்கின்றன. வடகரை, சொக்கம்பட்டி பாளையக்காரர்களுக்கு பாசரையாகவும் இருந்துள்ளது. சொக்கம்பட்டியை 'வடகரையார் ஆதிக்கம்' என்று வழக்கு மொழியில் கூறுவார்கள். தாலாட்டுப் பாடல்களில் கூட இடம் பெற்றுள்ளது. இந்த வடகரையார் ஆதிக்கம், செங்கோட்டையிலிருந்து 15 கல் தொலைவு வடக்கேயுள்ளது. திருவிதாங்கூர் மன்னர்களும் படையெடுப்புக் காலங்களில் இந்த வடகரைப் பாளையத்தை ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். இராபர்ட் ஆரம் குறிப்பிட்டுள்ளபடி இத்தகைய போராட்டங்களின் போது வடகரை ஆதாரக் களமாக பயன்பட்டு வந்துள்ளது.[35]

புலித்தேவரின் சமகாலத்தவர்கள் :

வடகரைப் பாளையக்காரர்களுக்கும் நவாப் மற்றும் வெள்ளையர்களுக்கும் பலபோர்கள் நடந்துள்ளன. இந்தப் பாளையக்காரர் நெற்கட்டான் செவ்வல் பூலித்தேவருடைய கூட்டாளி, பூலித்தேவரது காலத்தில் இருந்த சின்னஞ்சித்தேவன் மிகவும் பிடிவாதக்காரன், எதற்கும் அஞ்சாதவன். 1758 இல் யூசுப் கானுடன் முரண்பட்டபோது புலித்தேவர் ஏற்படுத்திய கூட்டணியில் யூசுப் கானைத் தாக்கி எறிய வேண்டும் என்று தீர்மானித்தார்கள். இந்த எதிர்ப்பின் முன்னணியில் நின்றார் இப்பாளையக்காரர்.[36]

1759 இல் யூசுப்கான் முதலில் தாக்கிய கோட்டை கொல்லங்கொண்டான் கோட்டையே. இதன் தலைவன் பாண்டியத் தேவன் என்பவன். இக்கோட்டையைப் புலித் தேவரும் வடகரைப் பாளையக்காரரும் தங்கள் படைகளை அனுப்பிக் காப்பாற்ற முன் வந்தார்கள். ஆனால் கோட்டை பிடிப்பட்டது.[37]

இக்காலத்தே ஊத்துமலையும் சுரண்டை பாளையங்களும் யூசுப்கானுக்கு அனைத்து உதவிகளும் செய்ய உடன்பட்டன. இதையே பெரிதாகக் கருதிக் கொண்டு ஏனைய பாளையங்களை துச்சமென மதித்து அவற்றின் மீது படையெடுத்தான் யூசுப். திருவிதாங்கூர் மன்னரும் மேற்குப் பாளையங்களின் தலைவர்களும் மாயூசுப்கானும் சேர்ந்து கொண்டு யூசுபகானுக்கு தொந்திரவு கொடுத்தனர். அவர்கள் ஊத்துமலை சுரண்டை இவைகள், மீது படை கொண்டு தாக்கி நாசப்படுத்தினர்.[38] ஆனால் இந்த நேரத்தில் வடகரை பாளையக்காரர் திருவிதாங்கூர்மீது படையெடுத்தார்மன்னர் யூசுப்கானுடன்சேர்ந்துகொண்டு ஒரு கூட்டம் போட்டுப்பேசி வடகரை பாளையத்தின்மீதும் புலித்தேவர் பாளையத்தின் மீதும் தாக்கினார்கள் படையில் 10,000 பேர் இருந்தனர். வடகரையார் மிக்க வருத்தம் கனிந்த வெறுப்புடன் புலித்தேவரிடம் சென்று அடைக்கலம் ஆனார். ஆனால் வடகரைச் சார்ந்த கிராமங்களை யூசுப்கான் படைகள் தீயிட்டுக் கொளுத்தினர். வடகரை நோக்கி படை திரும்பியபோது அதனை

33. History of Tinnevelly Semai By Biruthagadasapillai 1931—P 196.
34 Ibid—p. 196.
35. Hindustan Hstory—By Robert A ram —p. 420.
36. Tinnevely Dstrict Gazetteer HR Pate 1907—p 74
37. Ibid.
38. Tinnevelly Semai History—By Guruga Gnanapillai 1931—p. 67

அழிவினின்றும் காப்பாற்றுவதுபோல தற்செயலாய் பிரஞ்சுக்காரர்கள் சென்னையை முற்றுகை யிட்டுக் கொண்டிருந்தார்கள். இதனால் யூசுப்கான் திடீரென அழைக்கப்பட்டு சென்னைக்குச் சென்று விட்டான்.[39] எனவே வடகரை அப்போது தாக்குதலிலிருந்து தப்பியது.

பின்னர் இந்த வடகரை பாளையம் 19—7—1764 -இல் லெப்டினண்ட் ராபர்ட் கெல்லி என்பவனால் தாக்கப்பட்டு பிடிப்பட்டது.[40] வடகரைப்பாளையப்பட்டு ஆங்கில மொழியில் wadegara, wodagara, wadagara Chpoanan Taevar என்று அழைக்கப்பட்டு வந்திருக்கிறது, இப்பாளையம் குறித்து நெல்லை குத்தகைகாரர் தீத்தாரப்ப முதலியும், யூசுப்கானும் சென்னை கோட்டைக்கு எழுதிய 3 கடிதங்களின் சுருக்கங்களைக் கீழே காணலாம் :

Country correspondence (1758 Page 43).

From Yusoof cawn to Fort St. George. dated 2nd June 1758.

"..............I lately addressed two or three letters giving you an account of the occurrences in these Parts and of the disturbances raised by Pooleytevan and 10 Poygars as also of the Jemindars of Wadagara— — seizing 27 Horses on the night skvinish at the Pagoda of Tencachey and"[41] I must now inform you that I rode out from wootemala and levelled 2 or 3 gadys belonging to the Jemindars of Wadagara to the ground and the peons of the Kellery caste made their escape and I moved from thence and halted at Tencachy with my troops as the said wadagara being with in a coass distance from. Tenchey the Jemindar thereof fell upon our Circars' Army by night 2 or 3 times but by the blessing of God and your Favour I Punished them in a proper manner and about 40 peons of the Kellery was sent to bell by a cannooball. Afterwards I rod out from Tencacehy 2 or 3 times to Punish the Jemindars of wodagara, ruined and laid wase all the villages round belonging to him.........."[42]

2

From Md. Usoff cawn dated 25*th March* 1757—(*p.* 46),

to Fort St. George :

"........ ..I marched towards the Gady of Singampatty belonging to circar is order to punish the people of Wadagara Pollygar who lived there by the concurrence of Mahofuzcawn but on their hearing of my approach they left the gady and made their escape by night ...."[43]

From Tetarapa Moodillee, Dated 12*th January* 1757 (*page No.* 17)

To Fort St. George :

"...........I received advise that Pooleytevars people are raising very great disturbances as far as papan colam and Aulvar Churchey to the West ward and that Wadagara Chinnanan Tevar on his part disturbing as far as Sarvance Modavey for which reason of have sent Alagaphy Modaly........[44]"

Dated 23rd February 1757 *P.* 29 :

"............Mahofaz cawn left Moderna and arrived at Terpenam with a ret design to take possession of the country and from thence having passed round Tenchuley went to Nae acheval and got Pooley Taver and Wadagara Pollygar to join him and is raising several disurbances.[45]

39. Tinnevelly District Gazetteers—HR Pate 1917—P
40. Baill IG-Ki-Paltan By H. F. Murland.
41 Country correspondence of F.S.G. 1758—P. 43
42. Country correspondence of the F.S.C G. 1758—P. 43.
43 Country correspondence of the F.S.G. 1757—P. 46.

4- Country Correspondence .of FSG. 1757—P. 17
54 Ibid—P. 29.

இடைத்தரகர்களின் செல்வாக்கு :

இந்த வேளையில்தான் வெள்ளையத்தேவன் சின்னெஞ்சித் தேவனுடன் மாறுபாடுகொண்டு இப்பாளையத்தின உரிமைக்காக போராடிக்கொண்டிருந்தான்.[46] இத்தகைய உள்ளூர் குழப்பங்கள் யூசுப்கானின் மரணத்திற்குப் (1764) பிறகும் நீடித்தது. யூசுப்கானுக்குப் பிறகு (1764) நவம்பர் வரை நெல்லை பாளையங்கள் தளவாய் அழகப்ப முதலியின் கையில் விழ்ந்தன.[47]. பின்னர் இப் பாளையங்கள் 1765 முதல் 1769 வரை ஆற்காடு நவாப்பின் ஏஜெண்டான ராஜா குகுமத்ராம் என்ற இந்துவின் ஆளுகைக்கு உட்பட்டது.[48] பின்பு ஷேக் முகமதலி என்பவர் 1770-இல் சுமார் 9 மாதங்கள் ஆண்டு கொண்டு வசூல் செய்தான்.[49]

இக்காலத்தில் இந்தப் பாளையத்தைச் சுற்றியிருந்த பாளையங்களில் பல வேறு நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. இந்து ஏஜெண்டான ராஜா குகும்த்ராம் அனைத்துப்பாளையக்காரர்களுடனும் மனந்திறந்து பழகி வசூலில் ஈடு பட்டான். எனினும் யூசுப்கான் காலத்தில் 13,72,626 சக்கரங்களாகக் இருந்த வருமானம் இவன் காலத்தில் 8,96,483 சக்கரங்களாகக் குறைந்து போயின. ஷேக் முகமதல் காலத்தில் இன்னும் விழ்ச்சி கண்டது.[50]

சிவகிரிப் பாளையத்தின் போக்கு :

சிவகிரிப்பாளையத்தான் நவாப்பின் ஏஜெண்டிடம் நேரிடையாக மோதினான் ஏனைய பாளையக்காரர்களை நட்பாக்கிக்கொண்டான். கொழும்பில் இருந்த டச்சுக் கம்பெனியுடன் தொடர்பு கொண்டு ஆயுதங்கள் வரவழைத்தான்.[51] மைசூர் மன்னனான ஹைதர் அலியுடன் தொடர்பு கொண்டிருந்தான். இதே வேளையில் ஆற்காடு நவாப்பின் நெல்லை ஏஜெண்டான ஷேக் முகமதலியும் இதே போன்று அரசுக்கு எதிரான சூழ்ச்சியில் ஈடுபட்டான்.[52]

அன்னியர் கூட்டு :

எனவே, நெல்லை மாவட்டத்தையே தூத்துக்குடியில் உள்ள டச்சுக் காரர்களிடம் விட்டுவிடலாம் என்று அதற்கான ஒப்பந்தமும் தயாரித்தார் மதராஸ் கவர்னர். அதில் சுமார் 1,000 காலாட் படைகளையும், 200 பீரங்கிப் படை களையும் 1,000 மலேயாச் சைனியங்களையும் டச்சுக்காரர்கள் கம்பேனியார் களுக்குக் கொடுக்க வேண்டும். இப்படைகளுக்கான செலவுகளையும் டச்சு காரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பெயருக்கு நவாப் ஆட்சியை அங்கீகரித்து கொள்ள வேண்டும்.[53] ஆனால் முத்துச் சிப்பி சிலாபத்தில் கிடைக்கும். இலாபத்தினை டச்சுகாரர்கள் தாங்களே வைத்துக்கொள்ளலாம் போன்ற இந்த ஏற்பாடுகள் ஏட்டளவில் இருந்து விட்டதாகவே தெரிகிறது.

1781 ஆம் ஆண்டு உடன்படிக்கை :

கிழக்கிந்திய கம்பெனிக்கும் நவாப்பிற்கும் 1781-இல் நடந்த உடன்படிக்கை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இதனை '' The Assignment 1781 '' என்று கூறுவார்கள்.[54] நெல்லையில் வருமானத்தில் 1/6 பங்குமட்டும் நவாப்பின் சொந்தச் செலவுக்கு ஒதுங்கவும் மாவட்ட நிர்வாகத்திற்கு சண்சாணிப்பாளர் ஒருவரை நியமிக்கவும் ஒப்பந்தமானது. முதலில் 1781-இல் ஜார்ஜ் புராக்டரும் 1783-இல் இர்வின் என்பவரும் நியமிக்கப் பட்டனர்.[55] இருப்பினும் மாவட்ட நிர்வாகம் முடங்கிவிட்டது. எனவே 1783 இல் கர்னல் புல்லர்டோன் என்பவனை தென்னக கமாண்டராக நியமித்தனர். இவன முதலில் பாஞ்சாலங்குறிச்சியைத் தாக்கினான்.[56]

---

46. Tinnevelly District Gazetteers HR. Pate—P. 455.
47. S. Lushington Report on Tinnevelly District 1802—P. 8.
48. S. Lushington Report on Tinnevelly District 1802—P. 3.
49. Ibid—P. 3.
50. S. Lushingtion Report on Tinnevelly District 1802—P.
51 Tinnevell District Gazetteer HR Pate 1917—P 77.
52. Ibid—
53. Tinnevelly Distict Gazetteer HR· Pate—P. 77
54 Tinnevelly District Gazetteer HR pate—P· 77
55· Ibid·
56. Ibid.

வருவாய் வாரியம் உருவாதல் :

இப்போது (1779) சொக்கம்பட்டியில் வெள்ளையத் தேவன் ஏனைய பாளையக்காரர்களைத் தன்பக்கம் வளைத்துக்கொண்டு கோட்டையைத் தாக்கிப் பிடித்துக் கொண்டான். வெகு தந்திரமாக கம்பெனியை ஆதரிப்பது என்ற கொள்கையைப் பின்பற்றினான்.[57] எனினும் இதனால் பாளையக்காரர்கள் பகை ஏற்படக் காரணமானது. கம்பெனிக்கு ஆதரவு அளித்ததின் வாயிலாக பாஞ்சாலங்குறிச்சியைத் தாக்கிய புல்லர்டோன், சொக்கம்பட்டியை ஒதுக்கி விட்டான். ஆனால் வெள்ளையத் தேவனின் இந்த மகிழ்ச்சி வெகுநாள் நீடிக்க வில்லை. 1781-ஆம் ஆண்டின் ஒப்பந்தம் (The Assignment 1781) போய் 1785 ஒப்பந்தம் என்று ஒன்று ஏற்பட்டது.[58] அதன்படி நவாபின் கை ஓங்கியது. நவாபின் பிரதிநிதியே நெல்லைக்கு அமுல்தார் ஆனான். வெள்ளையத்தேவனுக்கு இது மிகவும் பாதகமாக அமைந்தது. ஆனால் கம்பெனியார் நவாப்பிடமிருந்து தங்கள் நிர்வாகத்திற்கு பணம் பெறுவது துரதிருஷ்டம் என்று கருதி 1786-இல் வருவாய் வாரியத்தை (Board of revenue) ஏற்படுத்தினார்கள்.[59] இதனை முதலில் (Board of Assigned revenue) என்றழைத்தார்கள். இதன் நிமித்தம் பெஞ்சமின் தோரிக் என்பவன் மாவட்டக் கலெக்டராக பாளையக்காரர்களின் பாதுகாப்பாளராகவும் நியமன மானான்.[60]

சொக்கம்பட்டிச் சூறை :

ஆற்காடு நவாப்பின் புதிய ஏஜெண்டான இக்திபர்கான் ஏனைய பாளையக் காரர்களின் பகையை ஏற்கெனவே உருவாக்கிக் கொண்டிருந்த வெள்ளையத் தேவனின் எதிரிகளுடன் சேர்ந்து அவனைப் பற்றிய துஷ்பிரயோகங்களுடன் 1787 இல் சொக்கம்பட்டியை நோக்கிப் படையெடுத்தான். வெள்ளையத் தேவன் பக்கபலமின்றித் திகைத்தான். கோட்டையை விட்டு வெளியேறினான்.[61]

இந்நிலையில் வெள்ளையத் தேவனால் துரத்தப்பட்ட சின்னெஞ்சித் தேவன் இப்போது கோட்டைக்குள் புகுந்தான். ஆனால் அடுத்த மூன்றாண்டுக்குள் 1790 இல் அவன் மரணமடைந்தான். பின்னர் அவனது மகன் பட்டத்துக்கு வந்தான். அவன் சிறுவனாக இருந்தான்.[62]

1792-இல் தன் பாளையப்பட்டின் நிலைமையைக் கண்ட வெள்ளையத் தேவன் கம்பெனியுடன் நட்புக்கொண்டு கவர்னர் மாக்ஸ் வெல்லுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ள முன் வந்தான்.[63]

ஆனால் 1795-இல் ஜோனி என்பவன் வெள்ளையத் தேவனின் வேண்டுகோளை ஏற்று சென்னை கவர்னருக்கு அப்பாளையப்பட்டின் மீது வெள்ளையத் தேவனுக் குரிய உரிமை குறித்து பரிந்துரைக் கடிதம் எழுதினான். வெள்ளைத் தேவன் அவனது உரிமையான அக்கோட்டையைப் பெற "No less an act of justice them of a Policy" என்று எழுதினான் வெள்ளையர் பிரதிநிதி[64]

1796 இல் மீண்டும் பாளையப்பட்டு வெள்ளையத்தேவனுக்கு அளிக்கப் பட்டது. சின்னெஞ்சித் தேவன் மறைவுக்குப் பின் அவன் குடும்பத்திற்கு மாதாந்திர பென்சன் வழங்கப்பட்டது.[65]

பிரபல வலங்கைப்புலி வெள்ளையத்தேவன் :

வெள்ளையத் தேவனுக்கு மீண்டும் 1803-இல் ஒரு சன்னத் (Sanad) வழங்கப்பட்டது.[66] இவர் 1810 இல் மரணமடைந்தார். இவரது மகனே பிரபலமான வலங்கைப்புலி வெள்ளையத் தேவனாகும்.[67] இவரது பதவிக் காலத் தின் ஆரம்ப நாட்களிலிருந்தே வரிப்பாக்கி இருந்து வந்தது. இவரது முதல் 14 ஆண்டுகளில் எட்டுமுறை அரசு இப்பாளையத்தைச் சுவாதீனம் படுத்திக் கொண்டது. எனவே தாமே ஒரு அடக்கு முறையாளரானான். அவரது சொந்தப் பாளையப்பட்டில் அடக்குமுறை தலைவிரித்தாடியது. மக்கள் இவரது கொடுமைக்கு அஞ்சினர். இவரைக் கொள்ளைக்காரனோ என்றும் நினைத்தனர். 1814-ஆம் ஆண்டு தென்காசி அரசுக் கருவூலத்தை கொள்ளை அடித்தார்.[68]

---

57. Ibid—P. 454.
58. Tinnevelly District Gazetteer HR Pate—Page 455
59. Tinnevel y Secmi Histoy—Gurugu dasapillai—P. 179.
60. Tinnevel y District Gazetteer AK. Pate—P. 79.
61. Ibid—P. 455.
62. Ibid—P. 455.
63. Ibid—P. 455.
64. Tinnevelly District Gazetteer HR Date—P. 455.
65. Papers reating to Poligars wars Tinnevelly District 1801—P. 28
66. Tinnevelly District Gazetteer HR pate—P. 455.
67. Ibid
68. Ibid

நாங்குநேரி (நஞ்சன் சேரி) கலவரம் : [69]

1816-இல் பூலம் என்றழைக்கப்பட்ட நான்குநேரியின் நடந்த கலவரத்தில் பங்கு கொண்ட மறவர்கள் அனைவரும் இவரிடம் அடைக்கலம் புகுந்தனர். இவர்கள் அனைவரையும் கைது செய்ய விடாமல் பாதுகாப்புடன் அனுப்பி வைத்தார். அவர்கள் காவல் பணியை மீண்டும் அவர்களுக்கே ஒப்படைக்க வும் ஏற்பாடு செய்தார். அந்த மாவட்டம் முழுவதும் சொக்கர்பட்டியாரின் பெயரைச் சொல்லிக்கொண்டு மறவர்கள் அதிகாரம் செலுத்தினர். அவர்கள் அனைவரும் தங்களை யார் தட்டிக் கேட்டாலும் ''வலங்கைப்புலியின் ஆள்'' என்று அதிகாரத்துடன் பேசித் திரிந்தார்கள். காவல்துறையும் நீதித்துறையும் கூட இவர்களது வழக்குகளை விசாரணை செய்யவே பயந்து கிடந்தன..[70]

அரசு— நீதிமன்றங்களில் ஒற்றர்கள் :

அக்காலத்தில் வழக்காடு மன்றங்கள் அனைத்திலும் இந்தப் பாளையக் காரனின் உளவாளிகள் நிறைந்திருந்தார்கள். இவர்கள் நீதி மன்றத்திலே என்ன நடக்கின்றது என்பதைக் கேட்டுக் கொண்டு சென்று வலங்கைப்புலியுடன் சேதிகள் உரைத்தனர். இதனால் எந்த வழக்கிலும் சாட்சி சொல்ல ஆட்கள் அஞ்சினர்.[71]

வல்லான் வகுத்த வாய்க்கால் :

வலங்கைப்புலித் தேவன், தலைவன் கோட்டை பாளையக்காரர் மாளிகையைத் தகர்க்கத் தூண்டினார்.[72] இவர்கள் இருவருமே கொண்டையங்கோட்டை மறவர்கள் தாம் என்றாலும் பலபிணக்குகள் இவர்களிடம் மலிந்து கிடந்தன புளியங்குடிகாரர்களுடன் சொத்துக்கள் பற்றித் தகராறு ஏற்பட்டு அதை ஹட்டில்ஸ்டன் என்பவர் மூலமாகத் தீர்த்து வைக்க முயற்சித்ததைக் குலைத்தார். வலங்கைப்புலித் தேவன் இவரது சொந்தப் பாளையத்தில் சிவில், குற்றவியல் வழக்குகளை விசாரிக்கவும், நீதி வழங்கவும் தாமே நீதி மன்றத்தை உருவாக்கி நடத்தினார். இதில் அநேகர் தண்டனை பெற்றனர். சிறைக் கூடத்தில் அடைக்கப்பட்டனர். தண்டம் விதிக்கப்பட்டதால் சொத்துக்களை விற்றுத் தண்டல் செலுத்தினர் குடிமக்கள். அவரது தீர்ப்பினை தட்டிக் கேட்பார் எவருமில்லை.[73]

***1819* ஆம் ஆண்டு மதராஸ் ஒழுங்கு முறைச் சட்டம்— *2* :**

1822 இல் இதுபோன்ற சுயாதிக்கச் செயல்களுக்காக வலங்கைப்புலித் தேவன் மதுரைக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் விசாரணைக்குள்ளாக்கப்பட்டார். 1819 ஆம் ஆண்டு மதராஸ் ரெகுலேசன்-2 (இணைப்பில் காண்க) இதன்படி அவரை நாடு கடத்தும்படி நீதிமன்றம் சிபாரிசு செய்தது. ஆனால் அரசோ இத் தண்டனையை அளிக்க விரும்பவில்லை. இருப்பினும் இவரது அக்கிரமங்கள் குறையவேயில்லை. [74]

வரிபாக்கியும், ஏலமும் :

1834 இல் அரசுக்கான வரிபாக்கி ரூ. 74,000 எனக் கணக்கிடப்பட்டது. [75] வலங்கைப்புலித் தேவன் பணம் செலுத்தும் சூழ்நிலையில் இல்லாததால் பாளை யத்தை விற்பனைக்குக்கொண்டு வந்தனர். 1822 இல் இருந்த நிலைமாறியது. உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு இவரை வெளியே விட்டு வைத்தால் சரியன்று என்ற நோக்கத்தில் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த ஆண்டிலேயே அவனது பாளையம் ரூ. 8,000-க்கு. ஏலத்துக்கு விடப்பட்டது. அப்பணம் முழுவதும் அரசிற்கே போய்ச் சேர்ந்தது. [76]

---

69. Papers relating to Poligars Wars—Tinnevelly District 1801—P. 13.
70. Tinnevelly District Gazetteers HR Pate—P. 456.
71. Ibid—P 456.
72 Ibid—P. 456.
73. Tinnevelly Dist. Gazetteer HR Date—P .456
74. Ibid—P. 456.
75. Ibd—P 456.
76. Tinnevelly District Gazetteer HR Date—P 456.

மாற்று ஏற்பாடுகளும்— அரசியற் கைதியும் :

சிறைக் காவலில் இருந்தபோதே வலங்கைப்புலித் தேவன் தமது எஸ்டேட்டை தன்மகன் பேருக்கு எழுதிப் பத்திரம் முடித்து விட்டான். மாவட்ட கலெக்டரும் இந்தப் பாளையத்தை அதன் உரிமையாளரான பாளையக்காரரின் மகனிடம் விட்டுவிட வேண்டும் என்று அரசுக்கு ஆலோசனை தெரிவித்திருந்தார்.[77] அப்போது ஜே. சி. ரவுட்டன் (J. C. Wroughton 1834,) என்பவர் கலெக்டராக இருந்தார். அரசு இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த எஸ்டேட் முழுவதையும் அளந்து வரிமதிப்பீடு செய்யப் படவேண்டுமெனக் கருதியது. ஆனால் இதனை எதிர்த்து வலங்கைப்புலித் தேவனுக்கு வேண்டியவர்கள் அனைவரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.[77] 1835-ல் சர்க்கியூட் கோர்ட்டில் மனு செய்தனர்[78] ஆனால் விசாரித்த நீதிபதியோ நாடு கடத்தப்பட்ட ஒரு அரசியற் கைதியின் விவகாரத்தில் தாம் குறுக்கிட முடியாது எனத் தீர்ப்பளித்துவிட்டார். இதே நீதிபதி சிறைக் கூடம் சென்று வலங்கைப்புலித் தேவனை நேரில் சந்தித்து அவனது சிறை வாழ்க்கையின் நிறைகுறைகளைக் கூறக் கேட்டபோது நீதிபதியிடம் வலங்கைப்புலித் தேவன் மிகவும் உணர்ச்சி பொங்க "நான் ஒரு அரசியற் கைதியாக இருக்கும் பட்சத்தில் அரசு தன் விதிமுறைகளுக்குத் குந்தகம் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டாமா? என்க்கு 1819 ஆம் ஆண்டு மதறாஸ் ரெகுலேஷன் -2 இல் குறித்தபடி காவலில் வைப்பதற்கான ஆணைப்பத்திரம் (வாரண்ட்) பெற்றுக்கொண்டு என்னைக் கைது செய்தார்களா"[79] என்று கேட்டான்.

ஒழுங்குமுறைச் சட்டமும் உரிமைக் குரலும் :

வலங்கைப்புலித் தேவனின் கேள்வியைப் புரிந்து கொண்ட நீதிபதி பின் விசாரித்து அதை ஒரு சட்டரீதியான தவறு என்பதை உணர்ந்து அரசுக்கு எழுதி விதிகளின்படி அவனுக்கு வாரண்ட் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்[80] 1835-இல் அவனை பெல்லாரி மாவட்டத்தில் உள்ள ஹூட்டி (Gooty) மலைக்கோட்டைச் சிறையில் அடைத்தார்கள். வலங்கைப்புலித் தேவன் தமது வேண்டுகோள் என்ன என்பதை நீதிமன்றத்துக்கு எழுதித் தெரிவித்தான். ஆனால் அவனுக்கு நியாயம் கிடைக்கவில்லை. இறுதியாக இந்திய அரசுக்கு மனுச் செய்து கொண்டான். இதனை ஏற்றுக் கொண்ட அரசு அவன்மீது முன்பு மேற்கொண்ட நடவடிக்கை முறையற்றது என்று தீர்மானித்து ஹூட்டி சிறைக்கூடத்திலிருந்து 1837 ஆம் ஆண்டு ஜூனில் விடுவிக்க ஆணைப்பிறப்பித்தது.[81] நெல்லை மாவட்டத்துக்கு அவன் திரும்பிச் செல்லக்கூடாது என்ற நிபந்தனையுடன் அவனது வாழ்க்கைச் செலவுக்கு படியும் வழங்க உத்தரவிட்டது. ஆனால் 16—4—1845 அன்று அதையும் நிறுத்திவிட உத்தரவிடப்பட்டது. (இணைப்பு இரண்டில் காண்க) இதற்கான காரணமென அரசு குறிப்பிட்டுள்ளது. "விடுதலைக்குப் பிறகு அவன் நெல்லைக்கு வந்தது; விடுதலைக்கான நிபந்தனைகளை மீறி நடந்து கொண்டான் என்பதே.

மதுரையில் உருவான ஒரு வழக்கு:

இதற்கு முன் வலங்கைப்புலித் தேவன் மதுரை-திருப்பரங்குன்றத்தில் சிறிது காலம் தங்கியபோது இவனுக்குரிய சொந்த நிலம் குறித்து எடுத்த தாவாவில் இவன் மதுரை மாவட்ட கலெக்டர் மீது ஒரு வழக்குத் தொடுத்திருந்தான். இந்த விவரங்கள் பற்றி 29—3—1845 தேதியில் மதுரை மாவட்டக் கலெக்டர் வருவாய் வாரியத்துக்கு தம்முடைய நிலையைக் குறித்து எழுதிய கடிதத்தில் வழக்கிற்கான பதிலை நீதிமன்றத்துக்குத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.[82]

வலங்கப்புலியின் நேர்வாரிசும் ரயத்துவாரி முறையும் :

வலங்கைப்புலித் தேவன் மகன் கருணாலய வலங்கைப்புலித் தேவன் ஆவான். 1834-இல் இவன் சொக்கம்பட்டி பாளையத்தை அடைய வேண்டிய முயற்சிகளையெல்லாம் செய்தான். அரசுக்கு ஏராளமான மனுக்கள் அனுப்பி ஓய்ந்த பின்னர் இலண்டனில் உள்ள இயக்குநர் குழுவிற்கு முறையாக மனுச் செய்து கொண்டான். பல ஆண்டுகளுக்கு பிறகு 1851-இல் மதறாஸ் அரசினை இப்பொருள் குறித்த அறிக்கை அனுப்புமாறு கோரினார்கள். இயக்குநர் குழுவினர்.[83]

77. Ibid·
78. Ibid.
79. Tinnevelli District Gazetteers HR Date 1917—P· 456.
80. Ibid.—P. 457.
81. Ibid.—P.457
82. Papers relating to Zamindaries Mittahas tc (Board received).

ஆனால் வருவாய் வாரியம், பாளையத்தை மீண்டும் பாளையக்காரரிடம் கொடுப்பதை விரும்பவில்லை. எனவே, பாளையத்தில் ஒழுங்கையும் அமைதியையும் நிலவச் செய்ய அரசு ஒரு முடிவு மேற்கொண்டது. நிலங்களை ரயத்துவாரி முறையில், அளக்கப்பட வேண்டும், தீர்வை விதிக்கப்பட வேண்டும், தனியார் முதலீடுகள் செய்யப்பட வேண்டும். இதனை உறுதிப்படுத்த அரசு நிலையான ஒரு நிர்வாகத்தை, ஏற்படுத்தும் என்றும் கூறப்பட்டது. ஆனால் நீதிமன்றமோ வலங்கைப்புலித் தேவனின் வாரிசான கருணாலய வலங்கைப்புலித் தேவனிடம் பாளையத்தை ஒப்படைக்கவேண்டுமென ஆணையிட்டது.84 1859 ஆம் ஆண்டு ஆகஸ்டு 16-ஆம் தேதி பாளையத்தின் நிர்வாகத்தினை ஏற்றுக் கொண்டான் இளைய வாரிசான கருணாலய வலங்கைப்புலித் தேவன்.

1866 இல் பாளையத்தின் கஜானா காலியானது. 18 கிராமங்களில் 9 கிராமங்கள் நீதிமன்ற ஆணைப்படி ஏலத்தில் விடப்பட்டது. பாளையக்காரன் தமது வருமானம் முழுவதுமாக ரூ. ஆறு லட்சம் வரை செலவழித்தான். மேலும் ரூ. ஏழு லட்சம் வரை வரிபாக்கியிருந்தது. 1866-இல் மாவட்ட கலெக்டர் பக்கிள் என்பவர் சொக்கம்பட்டியின் பாழடைந்த வெறுக்கத்தக்க நிலைமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[85] மேலும் 9 கிராமங்களும் விற்கப்பட்டன. எனவே ஜமீன்தார் என்று சொல்லிக்கொள்ள எந்த எஸ்டேட்டும் அவனிடம் இல்லை. அதன்பிறகு மிராசு-மிட்டா முறையில் 9 கிராமங்களையும் வெவ்வேறு வகையான குத்தகைகாரர்கள் கைப்பற்றினர்.86

சொக்கம்பட்டி ஜமீனின் அறக்கட்டளை :

சுமார் 3,130 ரூபாயில் அதாவது வல்லம் குன்னக்குடி சில்லறைப்புறவு, முன்னடிசேரி, சிவன் ஆனனூர் ஆகிய கிராமங்களின் வருவாயைக்கொண்டு இந்த ஜமீன் பெயரில் அறக்கட்டளை ஒன்று துவக்கப்பட்டது 87. இதன் தலைமையிடம்— தென்காசி குற்றாலம் சாலையில் உள்ளது. பிற்காலத்தில் மாவட்டக் கலெக்டர் இதன் தலைவரானார். இந்தக் கட்டளை கல்லால் கட்டப்பட்ட பங்களா ஒன்றில் நடைபெற்றதாகத் தெரிகிறது.

இந்த அறக்கட்டளை வாயிலாக தினப்படி அன்னதானம் நடந்து வந்துள்ளதாகத் தெரிகிறது. இதில் பலர் வேலைக்கு அமர்ந்திருந்தனர். சராசரி நாள் ஒன்றுக்கு 34 நபர்களுக்கு தினப்போஜனம் நடந்துவந்துள்ளது. இதற்கான சத்திரம் 1705 இல் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.88 சமுதாயத்தில் எல்லா வகைப்பட்ட மக்களுக்கும் ஒரு தர்ம சத்திரமாக இது விளங்கி வந்துள்ளது. இந்தச் சத்திரத்துடன் ''வலங்கைப்புலி விலாசம்'' என்ற பெயரில் ஒரு பங்களாவும் (இது ஜமீன்தார் வந்து தங்கிச் செல்லும் மாளிகையாக இருந்திருக்கலாம்) முஸ்லீம்கள் தங்க ஒரு விடுதியும் மற்ற யாத்திரைப் பயணிகளுக்கு ஒரு பங்களாவும் இருந்து வந்துள்ளதாகத் தெரிகிறது. 1868-இல் இந்தச் ஜமீன்தாருக்கு ரூ. 25,550 வரை வருமானம் வந்துள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இந்த பாளையம் இறுதியில் முன்னுரைத்தபடி 18 மிட்டாதாரர்களின் கையில் போய்ச் சேர்ந்தது.

வலங்கைப்புலி தேவனின் இறுதி நாட்கள் :

பிரபல வலங்கைப்புலித் தேவன், தமது குற்றாலம் பங்களாவில் தமது இறுதி நாட்களை கழித்துக் கொண்டிருந்துவிட்டு 1892-இல் மரணமடைந்தான் எனத் தெரிகிறது. 89

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பேரெல்லைகளைக்கண்டு வியந்த இந்த உலகமே ஒருமுறைகூட அதற்கு எதிராக மூச்சி விடத் தயங்கியதுண்டு. ஆனால் எங்கோ உலகின் ஒரு மூலையில்— ஒரு பாளையத்தின் குட்டி பூர்ஸ்வா— அந்தப் பேரெல்லைக்குச் சொந்தக்காரர்களைக் கண்டு— ஒரு உக்கிரம் நிறைந்த புயல் காற்றாக மாறித் தனக்கு சுயமரியாதையும சுய எண்ணங்களும் நிறைய உண்டு என்பதை உலகுக்கு வெளிக்காட்டிய அவனது நெஞ்சுரம் உண்மையிலேயே சுதந்திர உணர்வுகள் 1857 ஆம் ஆண்டுக்கு முன்பே பிறந்து விட்டன. என்பதைத் தான் உணர்த்துகிறது.

---

83. Tinnevelly District Gazetteer HR Date 1917—P· 457.
84. Ibid.
85. Ibid.
86. Ibid·
87. Manual of Tnnevejly Distrct By A·J. Stuart (1879).
88. Ibid.
89. Tinnevelty District Gazeteers by HR Date 1917—P. 457.

பாளயத்தின் சொத்துரிமை:

இந்த பாளையத்தின் கிராமங்கள் 8978 கோட்டை நன்செய் நிலங்களும், 13999 செயின்கள் புன்செய் நிலங்களும், கொண்டதாக விளங்கின கி.பி. 1841-இல் இந்த நிலங்களின் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 44,896-ஆக இருந்தது. நிருவாக வசதிக்காக சொக்கம்பட்டி பாளையத்தைச் சார்ந்த கிராமங்களில் கீழ்க்கண்டவைகள் மட்டும் சங்கரநயினார் கோயில் தாலுகாவுடன் சேர்க்கப்பட்டன.[90]

(1) திருவேட்டநல்லூர்.

(2) திருமலைநாயக்கன் புதுக்குடி.

(3) விரிருப்பு.

(4) குலசேகரமங்களம்.

(5) ஈச்சந்தா.

(6) வெள்ளாளன் குளம்.[91]

நிலச்சீர்பாடு பலவகைப் பாகுபாடுகள்

நெல்லை மாவட்டத்தில் 19-ஆம் நூற்றாண்டில் நிலங்களை பல்வேறு வகையாய், சீர்த்திருத்தம் என்ற பெயரில் பகுத்து அவைகளுக்கு நிலவரிகள் விதிக்கப்பட்டன.

ஆர் கே. பக்கிள் என்பவர் அம்மாவட்ட அதிகாரியாகவும், செட்டில் மெண்ட் கலெக்டராகவும் 92 இருந்தபோது பல பிரேரணைகள், மற்றும் சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். பான்புரி என்பவரும் நிலச் சீர் திருத்தங்கள் செய்து பல அறிக்கைகளை வெளியிட்டார். இவர்களுக்கு முந்தி காலங்களில் இந்த மாவட்டத்தில் நிலத் தீர்வைகளும், நிலப்பிரிவினைகளும் கீழ்க்குறிப்பிட்ட பெயரில் அமைந்திருந்தன.

(1) இந்துவரித்திட்டம்,

(2) முகமதிய வரித்திட்டம்,

(3) பிரிட்டிஷ் நிலவரித்திட்டம் (அமானித்திட்டம் 1800—1807),

(4) மூவாண்டுத் திட்டம் (1808—1810) (மிட்டாதாரர் அல்லது கிராமம் முழுவதும் சேர்த்து),

(5) அமானி செட்டில்மெண்ட் பயிரிடல் 1871,

(6) டெசின்னியல் செட்டில்மெண்ட் (1812—1822),

(7) ஒழுங்கு செட்டில்மெண்ட் (1822—1859),

(8) பீல்டு செட்டில்மெண்ட் (1825),

(9) மொத்தப் பைசல் (Lump settlement) (1859—1869),

(10) சர்வே செட்டில்மெண்ட்

(இவைகளுக்கான முழு விவரங்கள் ராபின்ஸன் அறிக்கை 12—3—1869-யில் உள்ளன.93

சமர்பந்தி வசூல்முறை—— ——..........தொடர்ந்து :

நெல்லையில் ஆர். ஏடன் (1833) என்பவர் கலெக்டராக இருந்தபோது குரும்நாமா ஜமாபந்தி செட்டில்மெண்ட் செய்து வரிவசூல் செய்துள்ளார் (பசலி 1238)94.

---

90. Papers relating to Zamindar, Mittah etc., Tinnevelly District P' 58 59.
91. Ibid.
92. Tinnevelly District Gazetteer HR Date 1917—. ,293 .
93. Report by Robinson on 12 March 1869.
94. Report by Robinson on 12 March 1869.

கி. பி. தாமஸ் (1842) என்பவர் கலெக்டராக இருந்தபோது (பசலி 1245 ஜமாபந்தி குகும் நாமாவில் உண்மையான சாகுபடியாளர்களைக்[95] கண்டறியும் முறைகளைப் புகுத்தியுள்ளார்.

ஜெ. பிளாக்பர்ன் (1832) கலெக்டர் பொறுப்பில் இருந்தபோது (பசலி 1246 ஜமாபந்தி குகும்நாமா முறைகளில் வரிவசூல் செய்துள்ளார்.[96]

ஆர். கே. பக்கிள் (1866) கலெக்டராக இருந்தபோது வெகுபிரமாண்டமான ரெவின்யூ செட்டில்மெண்ட் அறிக்கை ஒன்று தயாரித்து அளித்துள்ளார். (1872— 1879)[97]

முடிவுரை :

பிற்காலத்தில் சொக்கம்பட்டி பாளயத்தில் பிரமாண்டமான அரண்மனைக் கொத்தளங்களிற் கற்றாழையும் இண்டும் இசங்கும் ஆமணக்கும் முளைத்துக் கிடந்தன. ஆங்கே பன்றிகளும், நாய்களும், கழுதைகளும், வாசம் செய்தன. அரண்மனையில் பெரிய வாசற்படிகள் அமைந்த கேணியில் கவலைக்கட்டி நீர் இறைத்துக்கொண்டிருந்தார்கள். பல ஏக்கர் பரப்புள்ள அந்த அரண்மனையைச் சுற்றி மண்சுவர் இடிபாடுகளுடன் காணப்பட்டன. சில சிலைகள் அங்கே நடுகற்களாக தரையில் புதைக்கப்பட்டிருந்தன.

கடைசி ஜமீன்தார் தம் வாழ்நாளை இந்த அரண்மனையின் ஓரிடத்தில் கழித்துக் கொண்டிருந்தார். அவர் வேதமந்திரங்களை[98] உச்சரித்துக்கொண்டு ஒரு வேதாந்தியைப் போல் வாழ்க்கை நிலையாமையுடைத்தது என்பதை உணர்ந்தும் சந்நியாசியைப் போல வாழ்ந்தார் என கலெக்டர் எழுதியுள்ளார்.*

ஆனால் சீர்திருத்தம் மிகுந்த சின்னணைஞ்சித் தேவனும் அவருடன் சின்னப் பட்டம் இராசகோபாலத் தேவனும் இன்னும் குற்றாலம். ஈசுவரர் ஆலயத்தின் உள் மண்டபத்தில் கற்சிலைகளாக காட்சி அளிக்கிறார்கள். அவர்களது புகை படங்கள் இங்கே இணைக்கப்பட்டுள்ளன. இந்த பாளையப்பட்டு நாயகர்களின் வரலாற்றை தாலாட்டில் பாடியிருக்கிறார்கள், அங்குள்ள அன்னையர்கள் இவர்களது ஆட்சியின் மேன்மை கூற இலக்கியச் சான்றுகள் உண்டு. தமிழில் சிற்றிலக்கிய வகையில் ''குறம்'' என்ற குறவஞ்சிப் பாடலில் மேற்குறிப்பிட்ட இருவரும் இடம் பெற்றுள்ளனர், அவர்களின் சீரிய செயல்களை என்றும் மறக்காத வகையில் குற்றாலக் குறவஞ்சியில் திருகூடராசப்பக் கவிராயர் சின்னணைஞ்சேந்திரன் என்று உயர்வாக வைத்துப்பாடியுள்ளார்.

அது :

நன்னகர்க் குற்றாலம்........
தென்னாறும் சித்ர சபையையா எக்கள்.
சின்னணைஞ் சாத்தேவன்
செப்பேடு வெய்ந்த
முன்னாள் லேகுறி சொல்லிப் பெற்ற
மோகன மாமலைபார் மோகன வல்லி
....
ஆலயஞ்சூழ்க் திருப்பணியுங்கட்டி
அன்னசத் ரங்கட்டி அப்பாலும் தென்காசிப்
பாலமுங் கட்டிப் படித்தரம் சேர்கட்டிப்
பக்த சனங்களைக் காக்கத் துசங்கட்டி
மாலயன் போற்றிய குற்றால நாதர்
வழித் தொண்டு செய்திடக் கச்சைக்கட்டிக்கொண்ட
சிவன் கிளுவையில் சின்னணைஞ் சேந்திரன்
சிறுகால சந்தித் திருத்துப் புறவெல்லாம்

இப்பாட்டில் புலனாகும்.[99]

---

95. Report by Robinson on 12th March 1869.
96 Ibid.
97. Tinnevelly DistrictGazetter HR Date 1917—P. 300.
98. Papers relating to Zamindaries mttahs etc., of Tinnevelly District P. 44.
*........From all I could gather he continues a great release from choice and unike his class and his caste (Maravar) in parti ular spends a great portion of his times in devotions and rending vedas.
99. திருக்குற்றால குறவஞ்சி— திரிகூடராசப்பக் கவிராயர் 1955 சைவசித்தாந்தக் கழக வெளியீடு.

திரிகூடராசப்பக் கவிராயர் மதுரையை அரசாட்சி செய்து கொண்டிருந்த முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர் (1704)[100] இப்பாடலின் வழியாக சின்னணஞ்சேத்திரனும் இராசகோபாலத் தேவரும் குற்றாலநாதர் கோவிலைச் சுற்றி மதிற்சுவரும் அறவுணவு விடுதியும், தென்காசி செல்லப்பால மும் படித்தரமும் கோவிலுக்கு வரும் மக்களைக் காக்க கொடிமரமும் கட்டியதாக குறிப்பிட்டுள்ளார். [101] சொக்கம்பட்டியை கிளுவை நகர் என்று புகழ்ந்து பேசுகின்றார். கோவிலுக்கு அறுவகைச் சந்திக்கும் அவனால் அளிக்கப்பட்ட நன்செய் வயல்கள் ஏராளம் என்னும் பாடியுள்ளார்.

சின்னணஞ்சித் தேவனுடைய வடகரைப்பாளையத்துக்கு மந்திரியாகவும் மருதூருக்குத் தலைவராகவும் தென்காசி குற்றாலம் இவைகளைக் காக்கின்ற வராகவும் திருக்குற்றால அந்தாதி பாடியவருமாகிய பிச்சைப் பிள்ளை என்பவர் அக்காலத்தில் சிறந்து விளங்கியவர் என்றும் குறிப்பு உள்ளது.

''வடகரை ஆதிக்கம்'' என்ற வரலாற்று ஆராய்ச்சி நூல் ஒன்று ஒய்வு பெற்ற துணைக் கலெக்டர் ஒருவரால் எழுதப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதனை ஆய்வு செய்ய அந்நூல் கிடைக்கவில்லை எனினும் சொக்கம்பட்டி என்ற —சிறுபாளையப்பட்டின் வாழ்வும்—வளர்ச்சியும் வீழ்ச்சியும் பற்றி ஓரளவு நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது'' Struggle for existence '' என்று கூறுவார்கள். அத்தகைய நெறியில் கர்னாடகத்தில் (தெக்காணம்) மும்முனைப் போட்டி நடந்தது. அதிலே எத்தனை சோகக் கட்டங்கள் கண்டோம். கணக்கில்லை. ஒரு பக்கம் பாளையங்கள் ஒரு பக்கம் அன்னியரான வெள்ளையர்கள் நடுவே நவாப்புகள்—இந்த மூன்று அணியும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட காரணமானவைகள இந்த நீர்வளமும் நிலவளமும் மற்றும் வளத்துடன் இருந்த மாநிலமுமே தான். இவர்களில் யார் ஜெயித்தார்கள். எவருமில்லை அனைவருக்கும் ''ஆறடி நிலமே'' சொந்தமானது. இதைச் சொன்னவர் டால்ஸ்டாய் அவரது வாக்குப் பொய்க்கவில்லை.

சிறப்புரை :

இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் வங்கத்தின் இரட்டையாட்சி ஒரு மைல் கல் என்றால், அதற்கு பின்வா உருவாக்கப்பட்ட 1773 ஆம் ஆண்டின் ஒழுங்குமுறைச் சட்டம், 1784-ஆம் ஆண்டில் பிட்ஸ்இந்தியாச் சட்டம், 1793, 1813, 1833, 1853, 1858 ஆம் ஆண்டுகளில் பட்டயச் சட்டங்கள் அனைத்தும் காலனி ஆதிக்கத்தை அங்கீகரித்து ஆணை செலுத்துப் போடப்பட்ட சட்டங்கள் முன்னுரையாக எழுதப்பட்ட விதி களே அவைகள். 20,ஆம் நூற்றாண்டின் பல சட்ட வரைவுகளுக்கு இவை களே ஆதாரங்களாகும்.

இந்திய சுதந்திரக் கிளர்ச்சி உண்மையிலே 1857இல் ஏற்பட்டது என்று ஏற்றுக்கொண்டால் அக்கிளர்ச்சிக்குக் காரணமாக மேற்குறித்த சட்டங்களையும் அவற்றின் தவறான பிரயோகங்களையும் கூறலாம். ஆங்கிலேயர்களின் அதி காரங்களையும் அடக்கு முறைச் சட்டங்களையும் எதிர்த்தே இந்தக் கிளர்ச்சி ஏற்பட்டது என்ற உண்மைக்கு முன்னோடியாக 1819 ஆம் ஆண்டு மதராஸ் ரெகுலேசன் சட்ட பிரயோகத்தில் ஒரு தவறு ஏற்பட்டதைக் கண்டித்து அதை நீதிபதி ஒருவரிடமே வினாத் தொடுத்தவரும், கொடிய சட்டத்தை எதிர்க்கத் திறம் இல்லாத அக்காலத்தில் தட்டிக் கேட்டவரும், சிங்கத்தை அதன் குகையிலே சந்தித்து தன் மாபு வழி, வீரதீரத்தை காட்டியவரும், சொக்கம்பட்டி வலங்கைப்புலித் தேவனே என்றால் அது மிகையல்ல. இது மட்டுமல்ல அரசின் சட்டதிட்டங்களை அமுல்படுத்தும் அதிகாரிகள் சர்வ வல்லமை படைத்தவர்கள் என்பதை இன்றுவரை நாம் சட்டங்களின் துணையுடன் அறிந்திருக்கிறோம். அப்படிப்பட்ட அதிகாரிகளைக் கூட தவறு செய்த காலத்தில் வலங்கைப்புலித் தேவன் விட்டு வைக்க வில்லை என்ப தற்கு அவர் மதுரைக் கலெக்டர் மீது தொடுத்த வழக்கே சான்றாகும். அக்காலத்தே நீதி மன்றம் வரை சென்று நியாயம் கேட்டவரும் அஞ்சா நெஞ்சுக்கு சொந்தக்காரருமானவர் வலங்கைப்புலியே. சுதந்திரக் கிளர்ச்சிக்கு இலைமறைகாயாக இந்த நிகழ்ச்சியுதவியுள்ளது என்பதே ஆணித்தரமான வாத மாகும்.

முற்றும்.

---

100. குற்றால குறவஞ்சி திரிகூடராசப்பக்கவிராயர் 1955 சைவசித்தாந்தக் கழக வெளியீடு
101. திருஉருவச் சிலை புகைப்படம் காண்க.

[illegible] வேலி மாவட்டம் தென்காசி [illegible] திருக்குற்றாலநாதர் [illegible]
[illegible] வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள [illegible]
[illegible] சாமி செம்புலி சின்னணைஞ்சாத் தேவர் [illegible]



துவிஸ்தம்பத்தைச் சுற்றியுள்ள மண்டபமும்
திரிகூடமண்டபமும் சபாபதி மண்டபமும்
சித்திர சபையில் [illegible]
முகப்பு மண்டபம் கட்டியும்
தெப்பக்குளம் வெட்டியும்
ஐந்து தேர்கள் செய்து கொடுத்தும்
திருப்பணி ஆற்றிய வடகரை ஆதிக்கம்
பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத் தேவர்
கி.பி. 1660 - 1721.

திருநெல்[illegible] மாவட்[illegible] தென்காசி [illegible]
ஆலயத்தில் [illegible] பத்திரி [illegible]கப்பட்டுள்ள [illegible]
[illegible] பட்டம் பிரசன்னமாகி [illegible]
[illegible].

சித்திர[illegible]ல் செ[illegible]
[illegible]கப்பு [illegible]டபம் [illegible]டியும்
தெப்பக்[illegible]ம் [illegible]டியும்
[illegible] [illegible] வைத்து [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] கோபால் [illegible]
கி.பி. 1660-1721.

துணை நூற்பட்டியல்.

1 திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம். ஹ. குருகுக தாசப்பிள்ளை (1931).

2 Dis. Gazetteers of Tinnevelly by M.R.Pate, I.C.S. (1917).

3 Report on the Tinnevelly settlement by S. Lushinighton (1932).

4 Papers relating to Poligars wars Tinnevelly District (1914).

5 Papers relating to Zamindarier Mittah Etc. (1934) (Tinnevelly District Board sent).

6 Papers relating to Zamindarier Mittah etc.. Tinnelvelly District Board Received (1934).

7 A supplement to the District Gazetteer for Tinnevelly District 1934. By K. N. Krishnaswami Ayyar.

8 மூவேந்தர்குல தேவர் சமூக வரலாறு By மு. முத்துத் தேவர் (1976)

9 திருக்குற்றால குறவஞ்சி— திரிகூடராசப்பக் கவிராயர் (1955).

10 Military Country correspondences (1755-56 1757-1758).

11 Manual of the Tinnevelly District By A. J. Stuart M.C.S. (1879).

12 The Rebel commandant Yusuf Khan By S.C. Hill 1914.

13 Baillie—Ki. Paltan—By Lieutinants Col. H.F. Murland.

இணைப்பு—I.

(*Extract from the minutes of consultation under the date the 16th April 1845.*)

"The term upon which an allowance was assigned for the support of valangapooly Thavan having been infringed by his departure to Tinnevelly, the most noble the Governor in Council direct's that the allowance be stopped and the magistrate of that District be instructed to watch his proceedings and on the occurance of any improper conduct require him to give ample security for his good behavier under the regulation inforce.

I. F. THANAS,
Chief Secretary

(பிரதாப முதலியார் சரித்திரம் அதிகாரம் 13 முதல் 17 வரை)

13. நினையாக் கலியாணம்.

ஞானாம்பாள் என்னைத் தவிர வேறொருவருக்கு மாலை சூட்டச் சம்மதியாளென்று நான் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் போது, சம்பந்தி முதலியார் ஒரே பிடிவாதமாய்ப் பல இடங்களில் மாப்பிள்ளை விசாரித்து முடிவில் தன் மகளைத் திருநெல்வேலியிலிருக்கும் வீரப்ப முதலியார் குமாரன் சந்திரசேகர முதலிக்கு விவாகஞ் செய்யத் திர்மானித்தார். அதைக் கேள்விப்பட்ட உடனே என் தகப்பனாருக்கு ஆக்கிரகம் உண்டாகி, எனக்குக் கோயமுத்தூரிலிருக்கும் சொக்கலிங்க முதலியார் மகள் பூங்காவனத்தை மனஞ் செய்கிறதென்று நிச்சயித்தார். சித்திரை இருபத்தி எட்டாந்தேதி காலை ஆறு மணிக்குச் சுபமுகூர்த்தம் செய்கிறதென்று சம்பந்தி முதலியார் நிர்ணயித்தார். அதைக் கேள்விப்பட்ட என் தகப்பனாரும், அந்தத் தினத்தில் அந்த முகூர்த்தத்தில் என்னுடைய விவாகத்தை நிறைவேற்றுகிறதென்று நிர்ணயித்தார். அந்தக் கலியாணத்தை தடுக்க, என் தாயார் கூடியவரையில் பிரயாசப்பட்டார்கள். சம்பந்தி முதலியாருடைய வைராக்கியத்தினாலே என் தகப்பனாருடைய வைராக்கியமும் முற்றி என் தாயார் வார்த்தையை நிராகரித்து விட்டார்கள். என் தாயாரைச் சம்பந்தி முதலியார் வீட்டுக்குப் போகவேண்டாமென்று என் தகப்பனார் கட்டுப்பாடு செய்துவிட்டபடியால் என் தாயார் தம்முடைய தமையனாராகிய சம்பந்தி முதலியாரைச் சமாதானப்படுத்தவும் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது.

எங்கள் ஊருக்கு நாலுகாத வழி தூரத்தில் சம்பந்தி முதலியாருக்கும் எங்களுக்கும் பொதுவாக, பூங்காவூரென்கிற பெயருள்ள ஒரு கிராமம் இருக்கின்றது. இந்தக் கிராமத்தில் இருக்கிற பெரிய மெத்தை வீட்டின் தென்பாதி அவருக்கும், வடபாதி எங்களுக்கும் சொந்தம். சம்பந்தி முதலியார் ஆரம்பித்த கலியாணத்திற்குப் பெண்டுகள் விகாதம் செய்வதால் உள்ளூரிலே கலியாணம் செய்யக்கூடாதென்றும், மேற்படி பூங்காவூர் கிராமத்தில் தம்முடைய பெண்சாதி வீட்டில் கலியாணம்செய்கிறதென்றும். நிச்சயித்து, அந்தக்கிராமத்துக்கே நேராய் வந்து சேரும்படி திருநெல்வேலி வீரப்ப முதலியாருக்குச் சம்பந்தி முதலியார் கடிதம் அனுப்பினார். அந்தச் சமாசாரம் என் தகப்பனார் கேள்விப்பட்டு, அவரும் அந்தக் கிராமத்தில் எங்களுடைய வடபாதி வீட்டில் என்னுடைய கலியாணத்தை நிறைவேற்றுகிறதென்று சங்கற்பித்துக்கொண்டு அந்தக் கிராமத்துக்கே பெண் வீட்டுக்காரர்கள் நேராய் வரும்படி கோயமுத்தூருக்குக் கடிதம் அனுப்பினார். சம்பந்தி முதலியார் கலியாணத்துக்கு வேண்டிய சில சாமான்கள் சேகரஞ் செய்து அந்த கிராமத்துக்கு அனுப்பினார். என் தகப்பனாரும் முக்கியமான தளவாட சாமான்களையும் அரிசி, பருப்பு, நெய் முதலிய புசிகரணங்களையும் அனுப்பினார். இருவரும் அந்த கிராமத்து வீட்டில், அவரவர்கள் பாதியில் பந்தல் போடும்படி திட்டஞ் செய்து அதுவும் முடிந்தது. இந்தக் கலியாண ஆடம்பரங்களை யெல்லாம் பார்த்த உடனே ஞானாம்பாளை இழந்துவிட்டோமென்கிற துக்கம் அதிகரித்து, ஒரு தரித்திரன் நெடுங்காலந் தவஞ்செய்து பெற்றுக்கொண்ட திரவியத்தை, மறுபடியும் இழந்துவிட்டாற்போல அளவற்ற துயரம் உடையவன் ஆகினன். இவ்வகையாக நான் மனங்கலங்கிக் கொண்டிருக்கும்போது. தெய்வாதீனமாக அந்தக் கல்யாணத்துக்கு ஒரு இடையூறு சம்பவித்தது அஃதென்னவெனில் கலியாணத்துக்கு எட்டுத் தினங்களுக்கு முந்தி சம்பந்தி முதலியார் வீட்டில் அவர் தாயாதிகளில் ஒருவர் இறந்துபோய்த் துக்கம் நேரிட்டு அதனால் அந்தக் கலியாணத்தைத் தாமதப்படுத்தும்படி சம்பவித்ததால், மாப்பிள்ளை வீட்டார் இப்போது வரவேண்டாமென்றும், மறுமாசத்தில் வேறு முகூர்த்தம் நிச்சயித்துத் தெரிவிப்பதாகவும் சம்பந்தி முதலியார் திருநெல்வேலிக்கு உடனே கடிதம் அனுப்பி கலியாணத்தை நிறுத்தி விட்டார். எங்களுக்கும் அந்தத் துக்கம் உண்டானதால் அந்த விகாரத்தைக் கண்டு என் தகப்பனாரும் கோயமுத்தூருக்குக் கடிதம் அனுப்பி, தற்காலம் கலியாணத்தை நிறுத்திவிட்டு நிச்சிந்தையாயிருந்தார். கலியாணத்துக்கு முஸ்திப்புச் செய்ய பூங்காவூருக்குப் போயிருந்த எங்கள் காரியஸ்தர்களும், துக்கம் விசாரிப்பதற்காகச் சத்தியபுரிக்கு திரும்பி வந்து விட்டார்கள்.

கலியாணம் நிறுத்தலாய்ப்போன விஷயத்தைப் பற்றிக் கோயமுத்தூருக்கு எழுதிய கடிதம் போய்ச் சேர்ந்திருக்குமென்றும் பெண் வீட்டுக்காரர்கள் பயணத்தை நிறுத்தியிருப்பார்களென்றும் நாங்கள் நினைத்துக்கொண்டிருந்தோம். அப்படியிருக்க எங்களுடைய முந்திய கடிதப்படி பெண் வீட்டுக்காரர்களும், மாப்பிள்ளை வீட்டுக்காரர்களும் பூங்காவூருக்கு வந்து அந்த முகூர்த்தத்தில் ஏதோ ஒரு கலியாணம் நடப்பிப்பதாக எங்கே பார்த்தாலும் ஏகப் பிரஸ்தாபமாகப் பேசிக்கொண்டார்கள். நானாவது ஞானாம்பாளாவது அந்த ஊருக்குப் போகாமலிருக்கக் கலியாணம் எப்படி நடக்கக்கூடுமென்று நாங்கள் ஐயுறவுப் பட்டுக் கொண்டிருக்கும்போது, எனக்குக் குறிக்கப்பட்ட பெண்ணின் தகப்பனாராகிய சொக்கலிங்க முதலியார், முந்திக் குறிக்கப்பட்ட முகூர்த்தத் தினத்திற்கு மூன்று நாளைக்குப் பின்பு எங்கள் வீட்டுக்குத் துக்க முகத்தோடு வந்தார். அவர் ஒருவருக்கும் அறிமுகமில்லாதவரானபடியால் அவரை "யார்" என்று என் தகப்பனார் வினவ, அவர் "நான்தான் கோயமுத்தூர் சொக்கலிங்க முதலி. பெரிய வீட்டிலே பிச்சைக்கு போனால் கரியை அரைத்து மூஞ்சியில் தடவுவதுபோல், என்னை மோசம் செய்யலாமா?" என்று மிகவும் பரிதாபமாகச் சொன்னார். அதற்கு என் தகப்பனார் "துக்க நிமித்தம் கலியாணம் நின்று போன விஷயத்தைப் பற்றி உமக்குக் கடிதம் எழுதியிருந்தேன். அது வந்து சேரவில்லையா?" என்றார். அதற்கு அவர் அந்தக் கடிதம் வந்து சேரவில்லை. உங்களுடைய முந்தின கடிதப் பிரகாரம் நாலும் பெண் முதலானவர்களும் புறப்பட்டு, முகூர்த்தத்திற்குச் சற்று நேரத்திற்கு முன் பூங்காவூருக்கு வந்து சேர்ந்தோம். அப்போதுதான் திருநெல்வேலி வீரப்ப முதலியாரும், மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்களை எங்களுக்குத் தெரியாது. எங்களை அவர்களும் அறியமாட்டார்கள். அந்தக் கிராமத்திலிருக்கிற வீடு உங்களுக்கும் சம்பந்தி முதலியாருக்கும் பொதுவென்பதும், நீங்கள் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு அந்த வீட்டில் ஒரே முகூர்த்தத்தில் இரண்டு கலியாணஞ் செய்ய யோசித்திருப்பதும் எங்களுக்குத் தெரியாது. மாப்பிள்ளையும் பெண்ணும் வந்து சேர்ந்தவுடனே அந்த மாப்பிள்ளைத்தான் என் பெண்ணுக்குக் குறிக்கப்பட்ட உங்கள் மகனென்று நான் எண்ணிக்கொண்டேன். என் பெண்ணைச் சம்பந்தி முதலியாருடைய பெண்ணென்று மேற்படி வீரப்ப முதலியாரும் எண்ணிக்கொண்டார். எங்களுக்கு உண்மையைத் தெரியப்படுத்த அவ்விடத்தில் வேறே மனுஷர்களுமில்லை. அந்த வீட்டில் கலியாணப் பந்தல் முதலிய சிறப்புகள் செய்யப்பட்டிருந்ததுமன்றி, போஜன பதார்த்தங்களும் சித்தமாயிருந்தபடியால் அந்தக் தினத்தில் முகூர்த்தம் நிச்சயித்தானென்று நினைக்கும் படியாயிருந்தன. உங்களுடைய அந்தஸ்துக்குத் தக்க அலங்காரம் இல்லாதிருந்தபோதும் பெண்டுகளுக்குள்ளே கலகமென்று நீங்கள் எழுதியிருந்தமையால் அந்தக் கலகமே அலங்காரக் குறைவுக்குக் காரணமென்று நினைத்துக் கொண்டோம். முகூர்த்த நேரம் வந்து விட்டதால் இனித் தாமதிக்கக்கூடாதென்று எங்களுடன் கூட வந்த புரோகிதப் பிராமணர்கள் ஒரு பக்கத்தில் அலம்பினார்கள். உங்களுடைய சம்பந்தம் கிடைப்பது அரிதாகையால் அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதுபோல் நாங்கள் உடனே கலியாணத்தை ஆரம்பித்து அந்த மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் அந்த முகூர்த்தத்திலே விவாகம் நிறைவேற்றி, மாங்கல்யதாரணமும் ஆய்விட்டது. பிற்பாடு, நாலும் அந்த மாப்பிள்ளை வீட்டுக்காரர்களும் கலந்து யோகக்ஷேமங்களைப்பற்றி சம்பாஷிக்கத் தொடங்கின போது, அந்த மாப்பிள்ளை இந்த ஊர்ச் சம்பந்தி முதலியார் பெண்ணுக்கு உத்தேசிக்கப்பட்ட மாப்பிள்ளையென்று எனக்கும், என் பெண் உங்களுடைய மகனுக்காகக் குறிக்கப்பட்ட பெண்ணென்று திருநெல்வேலி வீரப்ப முதலியாருக்கும் தெரிந்து நாங்கள் பட்ட கிலேசம் கடவுளுக்குத்தான் தெரியும். கலியாண வீடு துக்க வீடாகி நாங்கள் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு அழும் படியான ஸ்திதியில் வந்துவிட்டோம். ஏனென்றால் அஷ்ட தரித்திரம் ஆத்தாள் வீடு அதிலும் தரித்திரம், மாமியார் வீடு என்பது போல் நானும் அந்த வீரப்ப முதலியாரும் பரம ஏழைகள். உங்களுடைய சம்பந்தத்தைப் பெரிதாக எண்ணி நான் வந்தது போலவே, இந்த ஊர் சம்பந்தி முதலியாருடைய சம்பந்தத்தை விரும்பியே வீரப்ப முதலியாரும் ஆவலுடன் வந்தார். நாங்கள் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்து விட்டது. இனி என்ன செய்வோம் என்று சொக்கலிங்க முதலியார் துக்கலிங்க முதலியாராய்ப் புலம்பி அழுதார்.

இந்த வர்த்தமானங்களைக் கேட்டவுடனே, மரண தண்டனை அடையும்படி தீர்மானிக்கப்பட்ட ஒருவனுக்கு அந்தத் தண்டனை நிவர்த்தியானால் எவ்வளவு சந்தோஷம் உண்டாகுமோ, அவ்வளவு சந்தோஷத்தை அடைந்தேன், என் தந்தையாருக்குப் பெரிய ஆச்சரியமும் விசனமும் உண்டாயிற்று. என் தாயாருக்கு ஒரு பக்கத்தில் இரக்கமும், ஒரு பக்கத்தில் சந்தோஷமும் வந்தன. உடனே என் தாயார் சொக்கலிங்க முதலியாரைப் பார்த்து காரியம் முடிந்த பிற்பாடு இனி என்ன செய்யலாம்? நீங்கள் விசனப்பட வேண்டாம். நீங்கள் எங்களை நம்பிக் கோயம்முத்தூரிலிருந்து இவ்வளவு தூரம் வந்துவிட்டபடியால், உங்களுக்கு நேரிட்ட வழிச் செலவு முதலியவைகளை ஒத்துக்கொள்கிறோம் என்று சொல்லி என் தகப்பனாருடன் ஆலோசித்து ஆயிரம் வராகன் சொக்கலிங்க முதலியாருக்குக் கொடுத்தார்கள். உடனே அவர் திருப்தியாகிவிட்டார்.

அப்படியே வீரப்ப முதலியார் சம்பந்தி முதலியார் வீட்டுக்குப் போய்க் காரியங்களைச் சொல்லி முறையிட்டுக்கொண்டதினால் அவருக்கும் ஆயிரம் வராகன் கிடைத்ததாக நாங்கள் கேள்விப்பட்டோம். இவ்வகையாக எனக்குக் குறித்த பெண்ணாகிய பூங்காவனத்துக்கும் ஞானாம்பாளுக்கும் குறித்த மாப்பிள்ளையாகிய சந்திரசேகர முதலியாருக்கும் முகூர்த்தம் நிறைவேறி, நானும் ஞானாம்பாளும் எங்கள் பூர்வஸ்திதிக்குக் குறைவில்லாமல் இருந்தோம். என்னுடைய பிரம்மசாரித்துவமும் நீங்கவில்லை. ஞானாம்பாளுடைய கன்னிமையும் கழியவில்லை. எங்களுக்குக் நெடுங்கால அநுபந்தம் உள்ள சம்பந்தி முதலியாருடைய சம்பந்தத்தை நீக்கி, அந்நிய சம்பந்தஞ் செய்ய ஆரம்பித்தது தெய்வத்துக்குச் சம்பந்தம் இல்லாதபடியால் அது தவறிப்போய்விட்டதாக என் தாயார் என் தகப்பனாருக்கு அடிக்கடி சொல்லிவந்தபடியால் என் தகப்பனார் மறுபடியும் பக்கத்திலே பெண் விசாரிக்காமல் ஆலசியமாயிருந்துவிட்டார். ஞானாம்பாளைக் கன்னிகாதானம் செய்யும்படி சம்பந்தி முதலியாருக்குப் பல ஊர்களிலிருந்து கடிதங்கள் வந்தும் அவர் வீட்டுப் பெண்டுகளுடைய இடைவிடாத முயற்சியினால் அவர் அந்தக் கடிதங்களுக்கு யாதொரு மறுமொழியும் அனுப்பாமல் அசிரத்தையாய் இருந்துவிட்டதாகக் கேள்விப்பட்டோம்.

14. ஞானாம்பாள் சிறையில் அகப்பட்டுத் தப்புதல் :

சிறையெடுத்தவன் சீவனை இழந்தது.

கோடை நாட்களிலே குடும்ப சகிதமாய் கிராமாந்தரம் போய் சில நாள் வசிப்பது, எங்கள் வழக்கமாயிருந்தது. அந்த வழக்கப்படி அந்த வருஷம் நாங்கள் எங்கும் போகவில்லை. சம்பந்தி முதலியார், எங்கள் ஊருக்கு வடபுறத்தில் இருகாத வழி தூரத்திலிருக்கிற அவருக்குச் சொந்தமான பனம்பள்ளிக் கிராமத்திற்கு குடும்ப சகிதமாய்ப் புறப்பட்டு அநேகம் வண்டிகள், குதிரைகள் பல்லக்குகளுடன் போனார். அங்கே சில நாளளவு தங்கியிருந்து ஒரு நாள் விடியற்காலத்தில் அந்தக் கிராமத்தைவிட்டுப் புறப்பட்டு அவர்கள் எல்லோரும் சத்தியபுரியில் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வந்து சேர்ந்து சற்று நேரத்திற்குப் பின்பு, அவர்கள் வீட்டிலிருந்து ஜனங்கள் அங்குமிங்கும் ஓடுவதும் கூக்குரலுமாக இருந்தது. நான் என் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டு என்ன சப்தமென்று விசாரித்தேன், பனம்பள்ளிக் கிராமத்துக்குப் போன எல்லோரும் திரும்பி வந்துவிட்டதாகவும் ஞானாம்பாளும் பல்லக்கில் வருவதாக எல்லோரும் எண்ணிக்கொண்டிருந்ததாகவும், ஊருக்கு வந்த பிற்பாடு ஒரு பல்லக்கிலாவது ஞானாம்பாள் இல்லையென்றும், அவள் காணாமற் போயிருக்கிற காரணந் தெரியாமையினால் அவளைத் தேடுவதற்காகப் பல இடங்களுக்கும் ஆட்கள் ஓடுவதாகவும், நான் கேள்வியுற்று அப்படியே திகைத்துத் திடுக்கிட்டுச் சற்று நேரம் மதிமயங்கியிருந்தேன். பிற்பாடு என் தேகம் நிலை கொள்ளாமல் எழுந்து, நானும் என்னுடைய இஷ்டர் ஒருவரும், இரண்டு பெரிய குதிரைகளின்மேலே ஏறிக்கொண்டு, ஆயுதபாணிகளாய் வடக்கே நோக்கிப் புறப்பட்டோம். ஞானாம்பாளைத் தொடர்ந்து கொண்டு மனம் முன்னே ஓட, அந்த மனத்தைத் தொடர்ந்து கொண்டு ஓடுவதுபோல் அதிவேகமாகச் சென்று, பல இடங்களிலும் தேடி ஆராய்ந்துகொண்டு பனம்பள்ளிக் கிராமத்துக்குப்போய் விசாரித்தோம். அங்கும் ஞானாம்பாள் இல்லையென்று தெரிந்து உடனே புறப்பட்டு வடக்கு ரஸ்தா வழியே போனோம். அந்தக் கிராமத்துக்குக் காத வழி தூரத்தில். அஸ்தமிக்கிற சமயத்தில் ஒரு சிறிய சகடம் ரஸ்தாவில் கொஞ்ச தூரத்தில் எங்களுக்கு நேரே வந்தது. அந்த வண்டியை நாலுபேர் தளைத்துக்கொண்டு, தெற்கே வருகிற வண்டியைப் பலவந்தமாய் வடக்கே திருப்பிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் இரண்டுபேர் குதிரையின்மேலும், இரண்டு பேர் பாதசாரிகளாயும், இருந்தார்கள். அவர்கள் வண்டியைத் திருப்பும்போது, அந்த வண்டியிலிருந்து பெண்களுடைய கூக்குரல் ஒலி கிளம்பிற்று. அந்த துஷ்டர்கள் நாங்கள் வருவதைப் பார்த்தவுடனே, குதிரையின்மேலிருந்த இருவர்களும் கத்திகளை உருவிக்கொண்டு எங்களை வெட்டுவதற்காக ஓடி வந்தார்கள். அவர்கள் எங்கள் சமீபத்தில் வருவதற்குமுன், குண்டுகள் போட்டுக் கெட்டிக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளை அவர்கள் மேல் பிரயோகித்தோம், குதிரையின்மேலிருந்த இருவர் தேகங்களிலும் குண்டுகள் பட்டுக் கீழே விழுந்துவிட்டார்கள். பாதசாரிகளான இருவரும் உடனே ஓட்டம் பிடித்தார்கள். அவர்களைப் போய் வளைக்கும்படி என்னுடைய நேசருக்குச் சொல்லிப் பின்பு வண்டியிலிருக்கிற ஸ்திரீகள் இன்னாரென்று அறியும்பொருட்டு, நான் குதிரையை விட்டுக்கீழே குதித்து வண்டிக்குப்பின் புறத்திலே போனேன். அந்த வண்டியிலிருந்து இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி என்னைக் கண்டவுடனே பெருஞ் சப்தமாய்க் கூவிக்கொண்டு வண்டியைவிட்டு என் முன்பாகக் கீழே விழுந்தாள். அந்தச் சத்தம் ஞானாம்பாளுடைய குரலாயிருந்ததால், அவளை, கையாலே தூக்கி நிறுத்தி முகத்தை உற்றுப்பார்த்தேன். அவள் தேகத்தில் ஒரு ஆபரணமில்லாமல், மண்டிச்சிகள்போலக் காவி வஸ்திரம் தரித்துக் கொண்டு, முகத்தில் எதையோ பூசிக்கொண்டு, அழுக்குப்படிந்த தங்கப்

பிரதிமைப்போல் உருமாறியிருந்தாள். அவளைப் பார்த்து ''ஞானாம்பாள் ஏனிப்படியிருக்கிறாய்?'' என்று கேட்டேன். அவள் தேம்பித் தேம்பி அழுது கொண்டு ''என்னைச் சீக்கிரத்தில் பணம்பள்ளிக் கிராமத்துக்குக் கொண்டுபோய்ச் சேருங்கள். சகல காரியங்களையும் பிற்பாடு தெரிவிக்கிறேன்'' என்று நடுநடுங்கிக் கொண்டு சொன்னாள். அவளை உடனே தூக்கி வண்டியில் உட்காரவைத்து வண்டியைச் சீக்கிரமாக விடும்படி வண்டிக்காரனுக்கு உத்தரவு கொடுத்து, நான் குதிரை மேலேறிக்கொண்டு நானும் என்னுடைய சிநேகிதனும் வண்டிக்கு முன்னும் பின்னுமாகப் போனோம். குண்டுபட்டு மாண்டுபோனவர்களுடன் பாதசாரியாய் வந்த இருவர்களையும் பின்கட்டு முறையாகக் கட்டி அவர்களையும் கூடக்கொண்டுபோனோம். அன்று இராத்திரி எட்டு மணிக்குச் சம்பந்தி முதலியாருடைய பணம்பள்ளிக் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். அவ்விடத்திலே சம்பந்தி முதலியாரும் பின்னும் அநேகரும் ஏகமாய்க்கூட்டங்கூடி மூலைக்கு மூலை ஆள் அனுப்பியும் ஒரு செய்தியுந் தெரியாமல் அழுது பிரலாபித்துக்கொண்டிருந்தார்கள். ஞானம்பாளைக் கண்ட மாத்திரத்தில் அவளைக் கூட்டிக்கொண்டு சம்பந்தி முதலியாரும் அவர் பத்தினி முதலானவர்களும் பட்ட துயரமும் அழுத அழுகையும் இவ்வளவென்று சொல்லி முடியாது. அவள் உருமாற்றமாய், அப்போதிருந்த கோலத்தைப் பார்த்தவர்கள் யார்தான் மனம் இளகாமலிருப்பார்கள்? அவள் அன்றைய தினம் முழுவதும் அன்ன பானாதிகள் இல்லாமற் பசிக்களையாயிருப்பதாகத் தெரிந்து, உடனே அவளையும் அவளுடன் கூடிவந்த ஆண்டிச்சியம்மாளையும் ஸ்நானம் செய்யும்படி சொல்லி அவர்கள் போஜனம் செய்த பிற்பாடு அன்றையதினம் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லும்படி நாங்கள் கேட்க ஞானாம்பாள் சொல்லத் தொடங்கினாள்.

''இன்றையத்தினம் விடியற்காலம் நாலுமணிக்கு இந்தக் கிராமத்திலிருந்து எல்லாரும் நம்முடைய ஊருக்குப் பிரயாணமாகும்போது, நானும் எழுந்து வெளியே வந்து எந்தப் பல்லக்கிலே ஏறிக்கொள்ளலாமென்று பார்த்து வருகையில் சில சிவிகையார் ஒரு பல்லக்கை எனக்குக் காட்டி ''இதில் ஏறிக்கொள்ளுங்கள் அம்மா'' என்றார்கள். நான் உடனே அந்தப் பல்லக்கில் ஏறிக்கொண்டு, அப்போது அதிக இருட்டாயிருந்ததனால் கதவை மூடிக்கொண்டு பல்லக்கிலே படுத்துக்கொண்டேன். பல்லக்குத் தூக்குகிறவர்கள் வழக்கப்படி சத்தமிட்டுக்கொண்டு என் பல்லக்கையும் மற்றப் பல்லக்கையும் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். நான் உடனே கண்ணை மூடிக்கொண்டு நித்திரை போய்விட்டேன். பிற்பாடு சூரியோதய நேரத்தில் நான் விழித்துப் பல்லக்கின் கதவைத் திறந்து பார்த்தபோது தெற்குமுகமாய்ப் போக வேண்டிய பல்லக்கு வடக்குமுகமாய் ஓடிக்கொண்டிருப்பதாகத் தெரிந்தது. மற்றப் பல்லக்குகளும் வண்டி, குதிரை முதலிய வாகனங்களும் கூட வருகின்றனவா வென்று அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் எட்டி எட்டிப் பார்த்தேன். என் பல்லக்கைத் தவிர வேறு ஒரு வாகனத்தையாவது சொந்த மனுஷர்களையாவது நான் பாராதபடியால் எனக்குச் சந்தேகமுண்டாகி சிவிகையாரைக் கூப்பிட்டு, பல்லக்கு வடக்கே போவதற்குக் காரணம் என்ன? வென்றும் மற்ற வாகனங்களெல்லாம் எங்கே? யென்றும் கேட்டேன். அவர்கள் மாறுத்தரம் சொல்லாமல் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு ஓடினார்கள். வழியில் யாராவது வந்தால், அவர்களை விசாரிக்கலாமென்று இருபக்கமும் பார்த்துக்கொண்டு போனேன். வெகு தூரம் வரையில் ஒருவரும் வரவில்லை. இன்னது செய்கிறதென்று தெரியாமல் நான் திகைத்துப்போயிருக்கும் போது, சிவிகையர் ரஸ்தாவுக்கு மேற்கே கொஞ்ச தூரத்தில் ஒரு கள்ளுக்கடையைக் கண்டு கள்ளு குடிப்பதற்காகப் பல்லக்கை ரஸ்தாவில் நிறுத்திவிட்டுக் கள்ளுக்கடைக்குப் போய் விட்டார்கள். தப்புகிறதற்குச் சமயம் இதுதானென்றும் இது தப்பினால்வேறு சமயம் வாய்க்காதென்றும் எண்ணி, உடனே நான் கீழ்ப்புறத்துக் கதவைத் திறந்துக்கொண்டு கீழே குதித்து அந்தக் கதவை மூடிவிட்டு பல்லக்கில் மறைவிலேபோய் ரஸ்தாவுக்குக் கீழ்ப்புறமிருக்கிற காட்டுக்குள் நுழைந்து விட்டேன். அது அடர்ந்த காடானதால் அதற்குள்ளே இருக்கிறவர்களை ஒருவரும் கண்டுபிடிக்க முடியாது. என்னுடைய காலில் இருந்த பாதரசம், தண்டை முதலியவைகள் சப்திக்காதபடி அவைகளைக் கழற்றி மடியில் வைத்துக்கொண்டு. முள்ளிலும் கல்லிலும் விழுந்து ஓட ஆரம்பித்தேன். அந்தக் காட்டில் மனுஷருடைய கால் அடியே இல்லாதபடியால் நான் குறுக்கே விழுந்து எனக்குச் சக்தி உள்ளமட்டும் ஓடினேன். மரக் கொம்புகள் என் மயிரைப் பிடித்திழுக்க, செடிகொடிகளெல்லாம் சேலையைக் கிழிக்க, முன்னேயிருக்கிற மரம் முட்டித்தள்ளப் பின்னோக்கியிருக்கிற மரம் பிடித்துத்தள்ளப் பக்கத்து மரங்கள் பாய்ந்து தாக்க இவ்வகையாக நான் வெகு தூரம் ஓடிய பிற்பாடு, கொஞ்ச தூரத்தில் ஒரு சிறிய மண்டபத்தைக் கண்டு அதற்கு நேரே ஓடினேன். அந்த மண்டபத்தில் இந்த ஆண்டிச்சி அம்மாளைத் தவிர வேறொருவருமில்லை. இந்த அம்மாள் என்னைக் கண்ட உடனே ''நீ யார் அம்மா உன்னைப்பார்த்தால் பரதேவதை போலிருக்கிறதே நான் பூசை செய்ய வந்த தெய்வம் பெண் வடிவங்கொண்டு பிரத்தியமாய் வந்ததுபோல் இருக்கிறதே என்று என்னை ஸ்தோத்திரம் செய்தார்கள். நான் அந்த அம்மாளுக்கு நமஸ்காரஞ்செய்து நான் தெய்வம் அல்ல, மனுஷிதான் என்று, நடந்த காரியங்களெல்லாம் தெரிவித்து என்னை ரக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தேன்.

அவர்கள் மனமிரங்கி என்ன செய்யவேண்டும்? என்று கேட்டார்கள். எப்படியாவது என்னைப் பனம்பள்ளிக் கிராமத்துக்குக் கொண்டு போய் விடவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தேன். அந்தத் துஷ்டர்கள் துரத்திக் கொண்டு வந்தால் என்னைக் கண்டுபிடிக்காதபடி, ஆபரணங்களையெல்லாம் கழற்றி ஒரு துணியில் முடித்துக்கொண்டு, ஒரு காவி வஸ்திரத்தை எனக்கு தரிப்பித்து என்னை உருமாற்றி, அழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். நாங்கள் தெற்கு முகமாய்ப் போகிற ஒரடிப் பாதை வழியாகப் வெகுதூரம் நடந்த பிற்பாடு ரஸ்தாவில் வந்து சேர்ந்தோம். அந்த ரஸ்தாவில் நடக்க எனக்கு மனமே இல்லை. ஆயினும் வேறே மார்க்கம் இல்லாதபடியால் எனக்குக் கால் நடக்கக் கூடாமல் வீக்கமாயிருந்த படியாலும் வழியில் ஒரு பாய் வண்டியை வாடகைக்கு அமர்த்தி, அதன் மேலே நாங்கள் இருவரும் ஏறிக்கொண்டு அதிக நடுக்கத்துடன் செல்லும் பொழுது அஸ்தமிக்கிற சமயத்தில் வடக்கே இருந்து இரண்டு குதிரைக்காரர்களும் இரண்டு காலாட்களும் ஓடிவந்தார்கள். அவர்களைப் பார்த்தி உடனே புலியைக் கண்ட பசுப்போல் நாங்கள் பயந்து பாதிப் பிராணவாய்ப்போய் விட்டோம். அவர்கள் வண்டிக்குப்பின்னே வந்து என்னை உற்றுப் பார்த்து, எப்படியோ நான்தானென்று கண்டுபிடித்துக்கொண்டு வண்டியை வடக்கே திருப்பச் சொல்லி வண்டிக்காரனை அடித்தார்கள். அந்தச் சமயத்தில் அத்தானும் அவருடைய சிநேகிதரும் குதிரைமேல் ஏறிக்கொண்டு தெற்கே இருந்து ஓடிவந்தார்கள். அவர்களை வெட்டுவதற்காக வடக்கே இருந்து வந்த இரண்டு குதிரைக்காரர்களும் கத்தியை உருவிக்கொண்டு நெருங்கினார்கள். உடனே அவர்கள் மேலே அத்தான் பிரயோகித்த குண்டுகள் பட்டு அவர்கள் கீழே விழுந்துவிட்டார்கள். பிற்பாடு நடந்த சங்கதிகளெல்லாம் அத்தானைக் கேட்டால் தெரியும். அந்தச் சமயத்தில் அத்தான் வந்து உதவாவிட்டால் என்னை மறுபடியும் நீங்கள் காணமாட்டீர்கள் என்று ஞானாம்பாள் சொல்லி முடித்தாள்.

15. ஞானாம்பாளைச் சிறையெடுத்தவன் வரலாறு.

ஞானாம்பாள் என்னைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறவரையில், என்னை ஒருவருங் கவனிப்பார் இல்லை. அவள் பிரஸ்தாபித்த மாத்திரத்தில் எல்லாருடைய கண்களாகிய வண்டுகள் என்னுடைய முகத்தாமரை மேலே மொய்க்க ஆரம்பித்தன. சம்பந்தி முதலியார் என்னைக் கட்டித்தழுவிக் கொண்டு செய்த ஸ்தோத்திரங்களுக்கு அளவு சங்கியையில்லை. அவர் சந்தோஷத்தினால் என்னை எவ்வளவு இறுகக் கட்டிப்பிடித்தாரென்றால், நான் மூச்சுவிட இடம் இல்லாமல், திக்குமுக்காட ஆரம்பித்தேன். நான் அவர் பிடித்த பிடியைத் திமிறிக்கொண்டு அவரைப் பார்த்து ''ஞானாம்பாளைக் கொண்டுபோனவர்கள் இன்னாரென்று தெரியவில்லை. வடக்கே இருந்து வந்த ரஸ்தாவில் ஞானாம்பாளை வளைத்துக்கொண்ட நாலு பேர்களில் குண்டுபட்டு விழுந்துவிட்டவர்கள் போக மற்ற இரண்டு பேர்களையும் பிடித்து கட்டிக்கொண்டு வந்திருக்கிறோம். அவர்களை விசாரித்தால் உண்மை தெரியலாம் என்று சொன்னேன். எல்லாரும நான் சொன்னது சரிதான் என்று ஒப்புக் கொண்டு, அந்த இருவரையும் விசாரிக்கத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவன் எங்களைப் பார்த்துச் சொல்லுகிறான். ''நாங்களிருவரும் பூங்காவூர்த்தாலுக்கா தாசில்தாருடைய சேவகர்கள். அவர் அந்த அம்மணியினுடைய அழகையும் குணாதிசயங்களையும் கேள்விப்பட்டுத் தான் மணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று விருப்பமானார். அதைக் குறித்துத் தங்களுக்குப் பல கடிதங்கள் அனுப்பியும், தாங்கள் அநுகூலமான மறுமொழி அனுப்பாமையால், எப்படியாவது இந்தப் பெண்ணரசியைக் கொண்டு போய் விவாகம் செய்கிறதென்று நிச்சயித்து, அதற்குத் தகுந்த சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். நீங்கள் இந்த கிராமத்துக்கு வந்திருந்து மறுபடியும் உங்கள் ஊருக்கு நடுச்சாமத்திலே போகிறீர்கள் என்று அவர் கேள்விப்பற்று எங்களையும் ஒரு பல்லக்கையும் அதிக ரகசியமாய் அனுப்பி, எவ்விதத்திலும் இந்த மனோன்மணியைக் கொண்டு வரும்படி உத்தரவு கொடுத்தார். அந்தப்படி நாங்கள் நேற்றைத் தினம் பாதிச்சாமத்தில் வந்து சேர்ந்து இந்த வீட்டிற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த அநேகம் பல்லக்குகளின் மத்தியில் நாங்கள் கொண்டுவந்த பல்லக்கையும் வைத்துவிட்டு மற்றவர்களைப் போல நாங்களும் படுத்துத் தூங்கினோம். விடிந்துபோனால் எங்களுடைய மோசம் வெளியாகுமென்று நினைத்து இருட்டிலே பயணம் புறப்படும்படி நாங்களே மற்றவர்களை யெழுப்பி விட்டோம். உங்கள் வீட்டு அம்மாமார்கள் எல்லாரும் தனித்தனியே ஒவ்வொரு பல்லக்கின் மேலே ஏறிக்கொண்டார்கள். இந்த அம்மணி வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தவுடனே எங்களுடைய பல்லக்கின் கதவைத் திறந்து அதில் ஏறிக்கொள்ளும்படி சொன்னோம். இந்த அம்மணி கபடம் இல்லாமல் ஏறிக் கதவைச் சாத்திக்கொண்டு தூங்கி விட்டார்கள். அந்தப் பல்லக்கைச் சிவிகையார் தூக்கிக்கொண்டு ஓடும்போது நாங்கள் இருவரும் பின்தொடர்ந்து போனோம். நாங்கள் மற்றப் பல்லக்குகளுடன் எங்களுடைய பல்லக்கையும் கொண்டுபோவது போல் மாரீசம் பண்ணி பிறகு, கொஞ்சம் கொஞ்சமாய்ப் பின் வாங்கினோம். மற்ற வாகனங்களும், ஆட்களும் கண் மறைகிறவரையில் மெல்ல மெல்லக் கொண்டு போய் இருட்டில் ஒருவருக்குந் தெரியாமல் எங்களுடைய பல்லக்கைத் திருப்பி அதிவேகமாய்க் கொண்டு போனோம்.

நாங்கள் இருவரும் வெகு தூரம் பல்லக்குடன் சென்று, பிற்பாடு தாசில்தாருக்கு சந்தோஷ சமாசாரம் சொல்வதற்காக நாங்கள் முந்தி போய் பல்லக்கில் அம்மா வருகிற சமாசாரத்தை அவருக்குத் தெரிவித்தோம். அவர் ஒரு வீட்டிலே தனிமையாய் இருந்துகொண்டு, சந்திரோதயத்துக்காகக் காத்திருக்கும் சாதகப் பக்ஷிபோல, அகமகிழ்ச்சியுடன் வழியைப் பார்த்துக்கொண்டிருந்தார். மத்தியானம் பதினைந்து நாழிகைக்குப் பல்லக்கு வந்து சேர்ந்தது. உடனே சிவிகையார் தாசில்தாரிடத்தில் வந்து "எசமானே தாங்கள் விரும்பின மாதரசியைப் பல்லக்குடனே கொண்டுவந்துவிட்டோம். நாங்கள் பட்ட பிரயாசைக்குத் தகுந்த சம்மானம் செய்யவேண்டும்" என்று சொன்னார்கள். உடனே தாசில்தார் எழுந்து ஓடி ஆதுர ஆவலுடன் பல்லக்கைத் திறந்து பார்க்க உள்ளே ஒருவருமில்லாமல் சுத்த சூன்யமாய் இருந்தது. அவரும் நாங்களும் பல்லக்கின் மூலை முடுக்குகளெல்லாம் தேடிப்பார்த்தோம். இந்த அம்மணியை எங்கும் காணோம். மணி பஞ்சரத்தில் இருந்த கிளி பறந்து போன பிற்பாடு பஞ்சரம் வெறுமையாயிருப்பதுபோல பல்லக்கும் வெறுமையாயிருந்தது. தாசில்தாருடைய அப்பனும் பாட்டனும் தேடிவைத்த பொக்கிஷத்தை நாங்கள் அபகரித்துக் கொண்டது போல் எங்கள் மேலே ரௌத்ராகாரமாய் கோபிக்க ஆரம்பித்தார். அடிப்பார் என்று பயந்துகொண்டு நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் தூரவிலகினோம். எங்களை அடிக்க அவர் கையில் ஒரு ஆயுதமும் இல்லாமல் இருந்ததால் நாங்கள் தெருவிலே கழற்றி வைத்திருந்த எங்களுடைய செருப்பை, அவர் கையிலே தூக்கிக் கொண்டு துரத்தினார். நாங்கள் அகப்படாமல் சிட்டாய்ப் பறந்தோம். நாங்கள் ஓட அவர் ஓட இவ்வகையாய் வெகு தூரம் துரத்தி வந்த பிற்பாடு அவர் கையிலிருந்த செருப்பை எங்கள் மேலே எறிந்தார். அந்த செருப்பு ஒரு மரத்தின் மேலே பட்டு, மறுபடியும் திரும்பித் தாசில்தாருடைய முகத்திலே மோதிற்று. ஔஷதப் பிரயோகத்தினால் விஷம் இறங்குவது போல செருப்படி பட்ட பிற்பாடு, தாசில்தாருக்கு கோபம் தணிந்து, எங்களை நயமாய்க் கூப்பிட்டுக் காரியங்களை விசாரிக்க ஆரம்பித்தார். போகிகள் "நடுவழியில் ஒரு இடத்தில் கள்ளுக் குடிக்கிறதற்காகப் பல்லக்கை நிறுத்தினோம்" என்று ஒப்புக்கொண்டபடியால், அந்த இடத்தில் இந்த அம்மணி தப்பிப்போயிருக்கலாமென்று உத்தேசித்து, உடனே தாசில்தாரும் அவருடைய நேசரும் இரண்டு குதிரைகளின்மேல் ஏறிக் கொண்டு எங்கள் இருவரையும் கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

நாங்கள் காடு மேடுகளெல்லாம் சுற்றிப் பார்த்துக்கொண்டு சூரியாஸ்தமன சமயத்தில் இந்த அம்மணிஏறிக்கொண்டு வந்த வண்டியைக் கண்டு மறித்தோம். அப்போது நடந்த யுத்தத்தில், தாசில்தாரும் அவருடைய நேசனும், குண்டுகள் பட்டுக் கீழே விழுந்துவிட்டார்கள். இந்த மனோன்மணி அப்போது மாறு வேஷம் தரித்திருந்த போதிலும், மேகத்துக்குள் மறைந்திருக்கிற சந்திர சூரியர்களை அவர்களின் பிரபை காட்டி விடுவதுபோல இந்த உத்தமியை அவளுடைய முகக்காந்தி காட்டிவிட்டது. மற்றச் சங்கதிகளெல்லாம் அப்போதுகூட இருந்த உங்களுடைய மனுஷருக்குத் தெரியுமானதால், நான் சொல்ல வேண்டுவதில்லை" என்றான். இதைக் கேட்ட உடனே சம்பந்தி முதலியார் மறுபடியும் என்னைத் தழுவிக் கொண்டு சொல்லுகிறார்- "நீ செய்த உபகாரத்தை நான் ஒரு நாளும் மறப்பேனா? என் புத்திரியைக் காணாமற்போன உடனே, உன்மேலும் சந்தேகம் நினைத்தேன். பிற்பாடு பல காரணங்களால் அந்தச் சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. என் மகளுக்கும் எங்களுக்கும் பிராண பிக்ஷை கொடுத்துக் காப்பாற்றினாய். உனக்குத் திரிலோகங்களையும் கொடுத்தாலும் தகும். ஆனாலும் நீ அங்கீகரிக்கும்படியான ஒரு சம்மானத்தை உனக்குச் செய்ய யோசித்திருக்கிறேன்" என்றார். அவரும் மற்றவர்களும் எனக்குச் செய்த ஸ்தோத்திரங்களையெல்லாம் ஞானாம்பாளுடைய ஒரு மந்தஹாசத்துக்குச் சமானமாக நான் நினைக்கவில்லை.

16. ஆண்டிச்சியம்மாள் சரித்திரம், மாமி நாத்திகளின் கொடுமை.

என்னுடைய ஸ்தோத்திரம் முடிந்தவுடனே ஞானாம்பாளுக்குத் துணையாக வந்த ஆண்டிச்சி அம்மாளை எல்லோரும் புகழ ஆரம்பித்தார்கள். அந்த அம்மையை நோக்கி "அம்மா நீங்கள் செய்தது பெரிய உபகாரம், ஒருவரும் இப்படிப்பட்ட உபகாரஞ் செய்யமாட்டார்கள். உலக நடை தெரியாத சிறு பெண்ணான ஞானாம்பாள் நடுக்காட்டில் உங்களிடத்தில் அடைக்கலம் புகுந்தது போல வேறே யாரிடத்திலாவது அடைக்கலம் புகுந்திருந்தால், அவளுடைய ஆபரணங்களை இச்சித்து அவளை ஜீவவதை செய்திருப்பார்கள். அல்லது அந்தத் தாசில்தாரிடத்தில் அவளை ஒப்புவித்திருந்தாலும், அவன் தகுந்த வெகுமானஞ் செய்திருப்பான். அப்படிப்பட்ட ஆபத்துக்கள் இல்லாமல் ஞானாம்பாளை எங்களிடத்தில் நீங்கள் கொண்டுவந்து ஒப்புவித்தது பெரிய உபகாரம். இதற்கு நாங்கள் என்ன பிரதி உபகாரஞ் செய்யப்போகிறோம்?" என்று வாழ்த்தினார்கள். இந்த ஆண்டிச்சி அம்மாள் நல்ல அந்தஸ்திலிருந்து மெலிந்துபோனதாகச் சில குறிப்புகளால் தெரிய வந்தபடியால், அவளுடைய சரித்திரத்தைச் சொல்லும்படி வேண்டிக்கொண்டோம். அவள் எங்களைப் பார்த்து "என்னுடைய சரித்திரம் மகா துயரத்துக்குரியது. நீங்கள் சந்தோஷமாயிருக்கிற இந்தச் சமயத்தில் என்னுடைய சரித்திரத்தைச் சொல்லி உங்களைத் துக்கப்படுத்த எனக்கு மனமில்லை. ஆயினும் உங்கள் வேண்டுகோளின்படி என்னுடைய சரித்திரத்தைச் சொல்லுகிறேன்" என்று சொல்லத் தொடங்கினாள்.

'' நான் ஒரு தனவான் வீட்டிலே பிறந்து தனவான் வீட்டிலே வாழ்க்கைப்பட்டேன்.
நான் பிறந்த இடம் புதுவை மாநகர். புகுந்த இடம் பொன்னகரி, என் தாயார் இறந்த
பிற்பாடு என் தகப்பனார் இதற்குப் பதினாறு வருஷத்திற்குமுன் இராணுவ வகுப்பில்
தளகர்த்தராயிருந்த என்னுடைய அத்தைமகனுக்கு என்னைப் பாணிக்கிரகணம்
செய்து கொடுத்தார். எனக்குக் கலியாணமாகி நான் புருஷன் வீட்டிற்குப் போன
உடனே தூர தேசத்தில் வாழ்க்கைப்பட்டிருந்த என்னுடைய நாத்தனார் புருஷன்
பிராணலிங்யாகம் ஆனதாகச் சமாசாரம் வந்தபடியால், என் மாமியார் அந்த
ஊருக்குப் போய்விட்டாள். அவள் திரும்பி வரப் பத்து மாதம் சென்றது. அந்தப்
பத்துமாத காலமும் நானும் என்னுடைய பர்த்தாவும், தேகமும் சீவனும போலவும
கரும்பும் ரசமும் போலவும் அதிகப் பிரீதியாக வாழ்ந்தோம். எங்களுடைய சந்தோஷம்
நீடித்திருந்தால் இந்த உலகமே சதமென்று நாங்கள் எண்ணிவிடுவோம் என்றோ,
அல்லது வேறென்ன காரணமோ, எங்களுடைய சந்தோஷத்தைக் கடவுள் மாற்றிவிட்
டார். எப்படியென்றால் பத்து மாதத்திற்குப் பிறகு என்னுடைய மாமியும் அமங்கலி
யாய்ப்போன அவளுடைய மகளும் வந்து சேர்ந்தார்கள. அவர்கள் எங்களுடைய
கிருகத்தில் வந்து பிரவேசித்தது கிரகசாரமே வந்து பிரவேசித்தது போல் ஆயிற்று.
அவர்கள் வந்து நுழைந்தபோது நானும் என் பார்த்தாவும் அதிக நேரமாகச் சல்லாபித்
துக்கொண்டிருந்தோம். அதைக் கண்டவுடனே அவர்களுக்குக் கோபம் பொங்கி
அவர்கள் எங்களைப் பார்த்த குரூரமான பார்வை ஆயிரங் கத்தி வெட்டுக்குச் சமானமா
யிருந்தது. அந்தப் பார்வையில் நாங்கள் பட்டுப் போகாமற் பிழைத்தது யார் செய்த
புண்ணியமோ, தெரியவில்லை. நான் அவர்களைக் கண்டவுடனே அவர்களுக்கு நமஸ்
காரஞ் செய்து அப்பாலே போய்விட்டேன். என் மாமியார் என் பர்த்தாவை நோக்கி
நான் உன் தகப்பனாரை விவாகஞ் செய்து இருபதுவருடம்வரைக்கும் மங்கிலியஸ்திரீயா
யிருந்தேன். அந்த இருபது வருஷ காலத்திலும் இரண்டு வார்த்தைகள கூட என்னுடைய
நாயகரிடத்தில் நான் பேசி அறியேன். புருஷன் வீட்டில் வந்து அடி வைத்த உடனே,
நாத்தனார் புருஷனைத் தின்று விட்டவள் இடத்தில் உனக்குப் பேச்சா ? என்றாள்.
உடனே என் பர்த்தா நாத்தனார் புருஷன் இறந்துபோனால் என் பெண்சாதி என்ன
செய்வாள் ? நான் என் பெண்சாதி இடத்திலே பேசினேனே தவிர, அந்நிய ஸ்திரீயிடத்
தில் பேசவில்லையே என்றார். இதைக் கேட்ட உடனே அந்தச் சிறுக்கி உனக்கு
இவ்வளவு பேசக் கற்றுக் கொடுத்து விட்டாளா ? என்று என் மாமி குதித்த குதிப்பும்
ஆடின ஆட்டமும், சதுருக்கு விட்ட தேவடியாள் கூட ஆடமாட்டாள். என்னுடைய
நாயகர் மானி ஆதலால், ஊர் சிரிக்கும் என்று பயந்து ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டார்.
அன்று முதற் பல நாள் வரைக்கும் என் மாமியார் வாயும், நாத்தனார் வாயும் ஓயவே
யில்லை. அவர்கள என்னுடைய கொட்டத்தை அடக்க வேண்டுமென்று இச்சித்துக்
கொண்டு வேலைக்காரர்களையெல்லாந் தள்ளி விட்டுச் சகல வேலைகளையும் நான்
செய்யும்படி என் தலைமேலே சுமத்தினார்கள். என் பர்த்தாவுக்கு அமுது படைத்தல்,
தாம்பூலங் கொடுத்தல் முதலிய வேலைகளையும் நான் செய்கிறதாயிருந்தால், என்
னுடைய சிரமங்களுக்கு ஒரு பரிகாரமாயிருக்கும். அந்த வேலைகளை எல்லாம் அவர்கள்
வகித்துக்கொண்டு கஷ்டமான வேலைகளை எல்லாம் என் பங்கில் வைத்துவிட்டார்
கள். எல்லோரும் சாப்பிட்ட பிறகு அவர்களுடைய உச்சிஷ்டத்துக்காக நான் காத்திருக்க
வேண்டுமே அல்லாது, எனக்குப் பசித்தபோது நான் சாப்பிடக் கூடாது. அந்த உச்சிட்ட
மும் பாதி வயிற்றுக்குக்கூடப் பற்றுகிறதில்லை. என் மாமியும் நாத்தியும் வந்த நாள்
முதல் நானும் என் புருஷனும் பேசுவது குதிரைக் கொம்பாகிவிட்டது. நான் ஒரு பக்கத்
திலும் அவர் ஒரு பக்கத்திலும் இருப்பதால் நாங்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடாம
லும், நயன பாஷைக்குக்கூட இடமில்லாமலும் போய்விட்டது. இராக்காலங்களில்
என்னுடைய பர்த்தாவின் படுக்கை அறைக்குள் நான் பிரவேசிக்காதபடி, அந்த அறையின்
வாசற்படி ஓரத்தில் தாயும் மகளும் படுத்துக்கொண்டு, ஒருவர் மாற்றி ஒருவர் பாராக்
கொடுக்கத் தலைப்பட்டார்கள்.''

'' இவ்வளவு துன்மார்க்கங்களுக்கும் இடங்கொடுத்துக் கொண்டு என் கணவர்
உபேக்ஷையாயிருப்பது எனக்கு மன வேதனையாயிருந்தாலும், அவர் மானத்துக்குப்
பயந்து மௌனமாயிருக்கிறாரென்றும் அவருக்கு என்னிடத்திலிருக்கிற அன்பு குறையா
தென்றும், எண்ணி நான் சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் பொறுமையுடன் சகித்தேன்.
அப்படியிருக்க என் மாமியும் நாத்தியும் சில விபசாரிகளை அடிக்கடி வீட்டுக்கு வர
வழைத்து அவர்களுக்கும் என் பர்த்தாவுக்கும் சிநேகிதத்தை உண்டுபண்ணச் சர்வ
பிரயத்தனஞ் செய்தார்கள். என்னுடைய கணவர் சொந்த ஸ்திரீயினிடத்திலே பேசக்
கூடாதென்று விலக்கி, அந்நிய ஸ்திரீகளுடன் சகவாசஞ் செய்யும்படி முயற்சி செய்த
என்னுடைய மாமியும் நாத்தியும் எப்படிப்பட்ட பொல்லாதவர்களாயிருக்க வேண்டு
மென்று நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள். இந்தக் கொடுமைகளை எல்லாம் தூர
தேசத்திலிருக்கிற என் தகப்பனாருக்கு நான் கடித மூலமாகத் தெரிவித்தால் உடனே
பரிகாரங் கிடைத்திருக்குமென்பதில் சந்தேகமேயில்லை. என் பாட்டனார் இறந்த
பிறகு என் தகப்பனாரே அவருடைய தங்கையாகிய என் மாமியை வளர்த்து, விவாகஞ்
செய்து கொடுத்ததுந் தவிர அவள் விதந்துவான பிறகும் அவரே அவளையும் அவள்
பிள்ளையாகிய என் பர்த்தாவையும் நெடுங்காலம் ஆதரித்து வந்தபடியாலும், அவர்
துஷ்ட கண்டகர் ஆனபடியாலும் அவரைக் கண்டால் கருடனைக் கண்ட பாம்புபோல்
என்னுடைய மாமியும் நாத்தியும் அடங்குவார்களென்பது நிச்சயமே. ஆயினும் புருஷன்
வீட்டில் நடக்கிற கொடுமைகளைத் தகப்பனுக்குத் தெரிவிப்பது பதிவிரதைகளுக்குத்
தகுதி அல்லவென்று கலகத்துக்கு ஆஸ்பதம் ஆகுமென்றும் நினைத்து, நான் என்னுடைய
வருத்தங்களை எல்லாம் என் தகப்பனாருக்குக் கடிதம் எழுதாமல் இருந்துவிட்டேன்.

என்னுடைய வருத்தங்களை எல்லாம் என் புருஷனுக்கு எவ்வகையிலாவது தெரிவிக்கிறதென்று நிச்சயித்துக்கொண்டு ஒருநாள் நடுச்சாமத்தில் எல்லாரும் தூங்கின பிற்பாடு நான் எழுந்து சத்தஞ்செய்யாமல் என் பர்த்தாவின் படுக்கை அறைக்கு நேரே போனேன். அந்த அறையின் வாசற்படி ஓரத்தில் இரண்டு காவற்காரிகளும் படுத்திருந்தார்கள். அவர்களுடைய காவலைக் கடந்து உள்ளே போகிறதற்காக அவர்கள் இருவரையும் ஒரே தாண்டாய்த் தாண்டினேன். உடனே என் சேலை தடுக்கி அடியற்ற மரம்போல அவர்கள் மேலே விழுந்துவிட்டேன். அப்போது இருட்டாயிருந்ததால் அவர்கள் என்னைக் கையாலே தடவிப்பார்த்து நான்தான் என்று கண்டுபிடித்துக்கொண்டு என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் என்னைப் பிடித்த பிடியை விடாமல் அடித்தபடியால் நான் அடி பொறுக்கமாட்டாமல் நகத்தால் அவர்களைக் கீறினேன். அவர்கள் தங்களுடைய நகங்களால், தங்களைத் தாங்களே அதிகமாகக் கீறிவிட்டுக்கொண்டு, எங்களை வந்து கொல்லுகிறாள் என்று கூவினார்கள். உடனே என் கணவர் விழித்துக்கொண்டு தீபத்துடன் எங்களிடம் ஓடிவந்தார். என்னைப் பார்த்தவுடனே உன்னுடைய அறையை விட்டு இங்கே நீ ஏன் வந்தாய்? என்று கேட்டார். நான் உண்மையான காரணத்தைச் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு, கள்ளப் புருஷன் வீட்டுக்குப் போய் அகப்பட்டுக் கொண்டவள் போல விழித்தேன். அந்த நீலிகள் இருவரும் அவர்களுடைய காயங்களை என் புருஷனுக்குக் காட்டி என்னைப் பேய் பிடித்திருக்கிறதென்றும், அல்லது பயித்தியமாவது என்னைப் பிடித்திருக்க வேண்டுமென்றும் சாதித்தார்கள். என் கணவரும் அப்படியே அபிப்பிராயப்பட்டு என்னைத் தள்ளிக்கொண்டு போய் என்னுடைய அறைக்குள்ளாக விட்டுக் கதவை இழுத்துச் சாத்தி வெளிப்பக்கத்தில் நாதாங்கி போட்டுவிட்டார். நான் புருஷனைப் பார்க்கப் போய் இப்படி வந்து சம்பவித்ததே என்று நினைத்து, அந்த இரா முழுவதும் நான் அழுத கண்ணீர் அறை முழுவதும் நிறைந்துவிட்டது. மறுநாள் விடிந்த உடனே வைத்தியர்களும், மந்திரவாதிகளும் வந்து கூடிவிட்டார்கள். வைத்தியர்கள் எல்லாரும் எனக்குப் பைத்தியமென்று சாதித்தார்கள். மந்திரவாதிகள் எல்லாரும் எனக்குப் பேய் பிடித்திருக்கிறதென்று வாதித்தார்கள். அவர்களில் ஒருவன் என்னை நூற்றெட்டுப் பேய் பிடித்திருக்கிறதென்று சொன்னான். அதைக் கேட்ட உடனே என்னை அறியாமலே எனக்கு கோபம் ஜனித்து அவ்விடத்திற் கிடந்த ஒரு கல்லை எடுத்து அவன் மேலே எறிந்தேன். என்னைப் பேய் பிடித்திருக்கிறதென்பதற்கு இது பிரத்தியட்சமான ருசு ஆகிவிட்டது. உடனே என்னைப் பிடித்துக் கைவிலங்கு கால விலங்கு போட்டு என் தலையைச் சிரைத்து வைத்தியர்கள் ஒரு பக்கத்திலும், மந்திரவாதிகள் ஒரு பக்கத்திலும் எனக்குச் செய்த சித்திராக்கினைகளை விவரிக்க என்னுடைய ஒரு வாய் போதாது. நான் அவர்களைப் பார்த்து ஒரு உயிர்க்கு இத்தனை எமன்கள் வேண்டுமா? எனக்குப் பைத்தியமுமில்லை, பேயுமில்லை. என்னை வீணாக ஏன் வாதிக்கிறீர்கள்? என்று அவர்களுக்கு இரக்கம் உண்டாகும்படி நான் கற்ற வித்தைகளை எல்லாம் காட்டினேன். நான் சொல்வதெல்லாம் எனக்குப் பிரதிகூலமாய் முடிந்ததே தவிர யாதொரு அனுகூலத்தையுஞ் செய்யவில்லை.''

''நான் புருஷனோடு கூடியிருந்த காலத்தில் எனக்குக் கர்ப்பம் உண்டாகி, அப்போது எனக்குத் தெரியாமலிருந்து இப்போது சில கர்ப்பச் சின்னங்கள் தோன்றினபடியால் கர்ப்பிணியாயிருக்கிற எனக்கு மருந்துகள் கொடுப்பது சரியல்லவென்று வைத்தியர்களுக்குத் தெரிவித்தேன். நான் கர்ப்பிணியென்று தெரிந்த மாத்திரத்தில், என்னுடைய மாமியும் நாத்தியும் அவர்களுடைய புருஷர்கள் அன்றைக்குத்தான் இறந்ததுபோல கரைகாணாத துக்க சாகரத்தில் அமிழ்த்தி முன்னையைப் பார்க்கிலும் நூறு மடங்கு அதிகமாக என்னைப் பகைக்க ஆரம்பித்தார்கள். என்னுடைய கர்ப்பம் அழியத்தக்க ஒளஷதப் பிரயோகஞ் செய்ய அவர்கள் யத்தனமாயிருக்கையில் ராக்ஷதனுக்குப், ஒரு புரோக்ஷிதன் உண்டு என்பதுபோல், என்னுடைய மாமியாரை அடக்கத் தக்க சுவாமியார் ஒருவர் வந்து சேர்ந்தார். அவர் யாரென்றால் என்னுடைய தகப்பனார்தான். அவர் என்னுடைய அலங்கோலத்தைப் பார்த்த உடனே உள்ளங் கலங்கி, என்னைக் கட்டிக்கொண்டு கதறினார். பிற்பாடு எனக்குப் பைத்தியமா அல்லவாவென்று நிச்சயிக்கும் பொருட்டு, என்னைப் பார்த்துப் பல கேள்விகள் கேட்டார். அவைகளுக்கு நான் தகுதியான மறுமொழி சொன்னதும் தவிர நடந்த காரியங்களை எல்லாம் சுருக்கமாக அவருக்குத் தெரிவித்தேன். என் மாமி, நாத்திகளின்மேல் அதிகமாக ஒன்றுஞ் சொல்லாமல் தர்மக்கோளாக அவர்கள் செய்த இரண்டொரு காரியங்களை வெளிப்படுத்தினேன். எனக்குப் பைத்தியமுமில்லை, பேயுமில்லை என்று என் தகப்பனார் கண்டுபிடித்துக்கொண்டு என் கைவிலங்கு, கால் விலங்குகளை வெட்டிவிட ஆரம்பித்தார். உடனே என் மாமியார் ஓடிவந்து அண்ணா, நீங்கள் செய்வதை யோசித்துச் செய்யுங்கள், விலங்கை நிவர்த்தி செய்தால் அவள் யாரையாவது உபத்திரவஞ் செய்வாளே என்றாள். இதைக் கேட்ட உடனே என் தகப்பனார் கோபாதிக்கராய் என் மாமியாரை எட்டி உதைத்தார். அவள் எட்டுக் குட்டிக்கரணம் போட்டுக்கொண்டு கீழே விழுந்தாள். நான் உடனே என் தகப்பனாருடைய காலைப் பிடித்துக்கொண்டு எய்தவனை நோகாமல் அம்பை நோவது போல் எல்லாங் கடவுள் செயலாயிருக்க என் மாமியாரைக் கோபித்துப் பிரயோசனம் என்ன? நான் ஏதோ துஷ்கிருத்தியஞ் செய்ததற்காகக் கடவுள் என்னைத் தண்டித்தார். என்னுடைய அத்தையை மொத்த வேண்டாம் என்று பிரார்த்தித்தேன். அவர் உடனே என்னை நோக்கி அவள் ஆதியில் பெண் கேட்டபோது அவளுடைய துர்க்குணங்களைப்பற்றியே பெண் கொடுக்க நிராகரித்தேன். அவள் மறுபடியும் ஆயிரந்தரம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதினாலும், சகோதர பாசத்தினாலும், கிளியை வளர்த்துப் பூனை கையிலே கொடுத்தது போல உன்னை விவாகம் செய்து கொடுத்தேன். அதற்கு வந்த லாபம் இதுதான் என்றார். அந்தச் சமயத்தில் என் கணவர் வந்து.

என் தகப்பனாருக்கு நமஸ்காரஞ் செய்தார். அவரை என் தகப்பனார் பார்த்து நீ சௌரியவானென்று பெயர் வைத்துக்கொண்டு, உன் வீட்டுப் பெண்டுகளை அடக்கத் திறமையில்லாமல் என்னை வரும்படி, பல கடிதங்களை அனுப்பினாய். இரண்டு துர்ப்பலமுள்ள ஸ்திரிகளை அடக்கச் சக்தி இல்லாத நீ யுத்தரங்கத்தில் உன்னுடைய சத்துருக்களை எப்படிச் செயிப்பாய் என்று பரிகாசஞ் செய்தார். என் புருஷன் என் தகப்பனாருக்குக் கடிதம் எழுதி வரவழைத்ததாக என் தகப்பனாருடைய வார்த்தைகளால் வெளிப்பட்டபடியால் என் புருஷன்மீது எனக்குண்டாயிருந்த மனஸ்தாபங்களெல்லாம் ஒரு நிமிஷத்தில் பறந்துவிட்டன. என் தகப்பனாரும் பர்த்தாவும் என் விலங்குகளைத் தறித்து என் மாமியார் எனக்கு நியமித்திருந்த காராக்கிருகத்தினின்று என்னை விடுதலை செய்தார்கள். உடனே வைத்தியமும் தொலைந்தது பைத்தியமும் தொலைந்தது. பேயும் பறந்தது, நோயும் பறந்தது. நான் பழையபடி என் பர்த்தாவை அடிக்கடி சந்திக்கவும், அவருடன் சம்பாஷிக்கவும் ஆரம்பித்தேன். இராக்காலங்களில் என் பர்த்தாவினுடைய பள்ளி அறைக்கு என் மாமியும், நாத்தியும் செய்து வந்த காவலும் ஒழிந்தது. என்னுடைய ஆவலும் ஒழிந்தது. அவர்களிருவரும் என் பிதா வந்தது முதல் பெட்டிப் பாம்புபோல் அடங்கினார்கள். என்னுடைய கர்ப்பம் நாள் தோறும் முதிர்ந்து பத்தாம் மாதத்தில் பாலசூரியன் போல் ஒரு பாலனைப் பெற்று, நான் மனோரம்மியமாயிருக்கும்போது மறுபடியும் ஒரு தௌர்ப்பாக்கியம் எனக்கு நேரிட்டது. அதென்னவெனில் இராஜாங்கத்தாருக்கும் அவர்களுடைய சத்துருக்களுக்கும் தூர தேசத்தில் யுத்தம் நேரிட்டதால் அந்த யுத்தத்துக்கு உடனே போகும்படி என் பர்த்தாவுக்கு உத்தரவு வந்தது. தண்டிலே போனால் இரண்டிலே ஒன்றாதலால் அந்த உத்தரவைக் கண்ட உடனே, எங்களுக்கெல்லாம் பெரிய இடி விழுந்ததுபோல் இருந்தது. என்னுடைய பர்த்தா சண்டைக்குப் போய்த் திரும்பிவருகிறவரையில் என்னையும் என் பிள்ளையையும், என் தகப்பனார் தம்முடைய ஊருக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சம்ரக்ஷிப்பதாகச் சொன்னார். அதற்கு என் புருஷன் சம்மதித்து, அவரும் எங்களோடு கூடப் பிரயாணப்பட்டு, என்னையும் என் பிள்ளையையும் என் தகப்பனார் வசத்தில் ஒப்புவித்துவிட்டு எங்களிடத்தில் விடை பெற்றுக் கொண்டு யுத்தத்துக்குப் போனார். அவர் போன பிற்பாடு சில காலம் வரையில் அவரிடத்திலிருந்து எங்களுக்குக் கடிதங்கள் வந்து, பிற்பாடு என்ன காரணத்தைப் பற்றியோ கடிதம் வராமல் நின்றுபோய் விட்டது. எனக்குப் பிள்ளைமட்டும் இல்லாமலிருக்குமானால் என் பர்த்தா பிரிந்த உடனே என் பிராணமும் பிரிந்து போயிருக்கும். புத்திரவாஞ்சையே என் பிராணன் போகாதபடி தடுத்துவிட்டது. என் பிள்ளை என் பர்த்தாவினுடைய சாயலாக இருந்தபடியால், பிள்ளை முகத்தைப் பார்த்துப் பார்த்து, புருஷனைப் பிரிந்த சோகத்தை ஒருவாறு மாற்றினேன். என் தகப்பனாருக்குப் புருஷப் பிரஜை இல்லாதபடியால் என் பிள்ளையை அவர் பிள்ளைபோல் அதிக பட்சமாக வளர்த்து இளமைப்பருவத்திலே வித்தியாப்பியாசஞ் செய்வித்தார். அந்தப் பிள்ளைக்குப் பத்து வயது நடக்கும்போது அநேக ஆபரணங்களைத் தரித்துக் கொண்டு ஒரு நாள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளை வீட்டுக்குத் திரும்பி வரவில்லை. உடனே என் தகப்பனாரும் வேலைக்காரர் முதலானவர்களும், வீதி வீதியாக ஓடிப் பிள்ளையைத் தேடினார்கள். பிள்ளையும் அகப்படவில்லை, பிள்ளையைத் தேடிப்போன என் தகப்பனாரும் வரவில்லை. வேலைக்காரர்கள் பல நாள் வரையில் பல இடங்களில் தேடிப் பார்த்தும் என் பிள்ளையும், தகப்பனாரும் அகப்படவில்லை. நான் பிள்ளையையும் இழந்து, பிதாவையும் இழந்து தாமரை இலைத் தண்ணீர் போல் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, என் புருஷனும் சண்டையில காயப்பட்டு இறந்து போனதாகச் சமாசாரம் வந்தது. நான் உடனே நெருப்பில் விழுந்த புழுப்போன்று துடித்துக் கீழே விழுந்து புலம்பி அழுதேன். அன்று முதல் நெடுநாள் மட்டும் நான் சித்த ஸ்வாதீனமில்லாமலிருந்து பிறகு என் பந்துக்களுடைய முயற்சியால் சித்தப் பிரமை தீர்ந்து பிழைத்துக் கொண்டேன். நான் என்னுடைய புருஷனைப் பிரிந்து இப்போது பதினைந்து வருஷமாகிறது. எனக்குப் பிராணபதமான அந்த மூவரும் இறந்து போயும், இறவாமலிருக்கிற என்னுடைய உயிர் எவ்வளவு வல்லுயிராயிருக்கவேண்டும்? நான் என்னை மாய்த்துக்கொள்ளலாமென்று பல சமயங்களில் நினைத்தேன். ஆனால் தற்கொலை செய்வது பரம பாதகமென்றும், அதைச் செய்கிறவர்களுக்கு நரகப் பிராப்தியென்றும் பெரியோர்கள் சொல்லுகிறபடியால் நான் என் பிராணனை விடாமல் தாங்கிக் கொண்டு திரிகிறேன். என் மாதா பிதாக்களும், புருஷனும் பிள்ளையும் தர்மிஷ்டர்களானதால் அவர்கள் மோக்ஷசாம்பிராச்சியம் அடைந்திருப்பார்களென்பது நிச்சயமே. அந்த இடத்துக்கு நானும் போய்ச்சேர வேண்டுமென்று சர்வ நாயக கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். உலகத்தில் எனக்கு ஒரு அபேக்ஷையும் இல்லாதபடியால், என்னையும் ஒருவரும் விரும்பாதபடி ஆண்டிச்சி போல் வேஷம் பூண்டுகொண்டு, இதற்குப் பத்து நாழிகை வழி தூரமான என் சிறிய தாயார் வீட்டில் வந்திருக்கிறேன். அதற்குச் சமீபமான ஒரு தனி மண்டபத்தில் நான் கடவுளை நோக்கித் தியானம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, மாதர் சிரோமணியாகிய ஞானாம்பாள் வந்து அடைக்கலம்புகுந்தாள். இதுதான் என் சரித்திரம் என்றாள்.''

ஆண்டிச்சியம்மாளின் சரித்திரத்தைக் கேட்டு அனுதாபப்படாதவர்கள் யாரும் இல்லை.

17. போர்வீரர்களின் வரவு குற்ற விசாரணை. ஆண்டிச்சியம்மாள் ஆர்வலனைக் காணுதல்.

ஞானாம்பாள் தப்பி வந்த சமாசாரம் என்னுடைய தாய் தந்தையர் கேள்விப்பட்டு, அவளைப் பார்க்கும் பொருட்டு மறுநாள் உதய நேரத்துக்குப் பனம்பளளி கிராமத்துக்கு வந்தார்கள். அவர்களைக் கண்ட உடனே சம்பந்தி முதலியார் சந்தோஷ சித்தராய்ச் சொல்லுகிறார். உங்களுடைய புத்திர சிரோமணியால் எங்களுடைய அருமைக் குமாரத்தியை நாங்கள் மறுபடியும் கண்டோம். அவளை இன்னும் இரண்டு நாள் வரைக்கும் காணாமலிருப்போமானல், எங்களுடைய உயிரைக் காணமாட்டோம். நாங்கள் குடும்பத்துடன் மாண்டுபோயிருப்போம். உங்கள் குமாரனே எங்களுக்குக் குடும்பப் பிரதிஷ்டை செய்வித்தான். ஞானாம்பாளுடைய சரீரம் அவனால் ரக்ஷிக்கப்பட்டபடியால் அந்தச் சரீரத்தை அவனுக்கே தத்தம் செய்ய யோசித்திருக்கிறேன். இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ? என்று கேட்டார். உங்களுடைய இஷ்டப்படி நடக்கக் காத்திருக்கிறோம் என்று என்னுடைய தாய் தந்தையர்கள் சொன்னார்கள். கலியாணத்தை இனித் தாமதப்படுத்தக் கூடாதென்றும் சீக்கிரத்தில் நிறைவேற்ற வேண்டுமென்றும் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது வீட்டுக்கு வெளியில் யுத்தம் நடப்பதுபோல் பெரிய இரைச்சலும் சப்தமும் கேட்டு நாங்கள் உடனே வெளியே ஓடிப் பார்த்தோம். அனேக சிப்பாய்களும் சேவகர்களும் உருவின கத்தி முதலிய ஆயுதங்களுடனே வந்து எங்கள் வீட்டை வளைத்துக் கொண்டார்கள். அவர்களுடன் கூட ஒரு பெரிய குதிரையின் மேல் ஏறிக்கொண்டு வந்த சுதேசியான ஒரு உத்தியோகஸ்தர் அதிக கோபத்துடன், பிரதாப முதலி யென்பவன் யாரென்று கேட்க நான்தானென்று அவருக்கு எதிரே போனேன். என்னைப் பிடித்துக் கட்டும்படி உத்தரவு கொடுத்தார். உடனே என் தகப்பனாரும் சம்பந்தி முதலியாரும் ஓடிவந்து அந்தப் பிள்ளையைக் கட்ட வேண்டிய காரணம் என்ன ? அவன் என்ன குற்றம் செய்தானே ? என்று கேட்டார்கள். உடனே எங்கள் பந்துக்கள், வேலைக்காரர்கள், அந்தக் கிராமத்துக் குடிசள் முதலான இருநூறு ஜனங்கள் கூட்டங் கூடினதை அந்த உத்தியோகஸ்தர் கண்டு பயந்து, என்னைக் கட்ட வேண்டாமென்று உத்தரவு கொடுத்து தெருத் திண்ணைமேல் உட்கார்ந்து கொண்டு, என்னைப் பார்த்து ஒரு பெரிய உத்தியோகஸ்தனாகிய தாசில்தாரை நிஷ்காரணமாய் நீர் கொலை செய்துவிட்டதால், அதைப்பற்றிய விசாரிக்க வந்திருக்கிறோம். நீர் என்ன சொல்லுகிறீர் ? என்று கேட்டார். இதைக் கேட்ட உடனே எனக்குத் தைரியம் உண்டாகி, ஞானாம்பாள் விஷயத்தில் அந்தத் தாசில்தார் செய்த அக்கிரமங்களை எல்லாம் ஆதியோடந்தமாகத் தெரிவித்தேன். உடனே அவர் " நீர் சொல்வதற்குச் சாட்சிகள் உண்டா ? என்று வினவினார். சாட்சிகள் இருக்கிறார்களென்று சொல்லி, நான் பிடித்து வைத்திருந்த இரண்டு சேவகர்களையும் அவர் முன்னே கொண்டு வந்து விட்டேன். அவர்கள் ஒரு காரியத்தையும் மறைக்காமல், சகல சங்கதிகளையும் விபரமாய்ச் சொல்லி வாக்குமூலம் எழுதிவைத்தார்கள். பிற்பாடு ஞானாம்பாளைத் திரை மறைவில் இருக்கச் சொல்லி அவளையும் அவருடன் கூடவந்த ஆண்டிச்சி அம்மாளையும் விசாரித்தார். கடைசியாய் அவர் உண்மையைத் தெரிந்துகொண்டு, என்னை நோக்கிச் சொல்லுகிறார். தாசில்தாரையும் அவருடைய நேசனையும், நீர் நிர்நிமித்தமாய்க் கொலை செய்ததாக மட்டும் பிரஸ்தாபமே தவிரத் தாசில்தார் செய்த அக்கிரமங்களை ஒருவரும் தெரிவிக்கவில்லை. இப்போதுதான் உண்மை வெளியாயிற்று. தகுந்த அந்தஸ்துள்ள ஒரு கன்னிப் பெண்ணை, அந்தத் தாசில்தார் பலவந்தமாய்க் கொண்டு போவதும், பிற்பாடு அந்தப் பெண் தப்பி ஓடும்பொழுது மறுபடியும் அவன் தொடர்ந்து, பலாத்காரம் செய்ய யத்தனப்பட்டதும் பெரிய அக்கிரமம் அந்தப் பெண்ணை தேடிக் கொண்டுபோன உம்மை, அவனும் அவனுடைய நேசனும் கத்தி உருவி வெட்ட வந்தபடியால், உமது பிராணனை ரக்ஷித்துக் கொள்ளும் பொருட்டு, அந்தத் துஷ்டர்களைக் கொலை, செய்ய வேண்டிய அகத்தியமாயிருந்தது. ஆகையால் இந்த விஷயத்தில் உம்மிடத்தில் யாதொரு குற்றமுமில்லை. ஜனங்களுடைய க்ஷேமத்துக்காகத் தாசிலாக நியமிக்கப்பட்ட அந்தக் கொடியன் அவனுடைய அதிகாரத்தை துர்விஷயத்தில் உபயோகப்படுத்தினபடியால், அவன் ராஜ தண்டனைக்கும், தெய்வ தண்டனைக்கும் பாத்திரனாக இருக்கிறான். தெய்வ தண்டனை முந்திக்கொண்டபடியால், ராஜ தண்டனைக்கு இடமில்லாமற் போயிற்று. ஆகையால் நீர் நிர்தோசியென்று மேலான அதிகாரிகளுக்கு விஞ்ஞாபிக்கப்படும் " என்றார். இதைக் கேட்டவுடனே எங்களுக்கெல்லாம் தேகத்தை விட்டுப் பிரிந்துபோன உயிர் மறுபடியும் திரும்பி வந்ததுபோல் ஆனந்தம் உண்டாயிற்று. உடனே அந்தக் கனவான் விசாரணையான விவரங்களைக் கண்டு ஒரு விஞ்ஞாபனப் பத்திரிகை யெழுதி, அதைச் சில சேவகர் கையிலே கொடுத்துக் கலெக்டரிடத்திற் கொடுக்கும்படி அனுப்பினார்.

அதற்குப் பிறகு அந்தக் கனவான் அவருடன் வந்த போர் வீரர்களை நோக்கி " நீங்கள் போய்க் கூடாரத்தில் இருங்கள், நான் சீக்கிரத்தில் வருகிறேன்" என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார். அவர்கள் போன பிற்பாடு அவர் ஏதோ பெருந்துயரத்தைக் கொண்டிருப்பதாக அவருடைய முகக்குறியினால் விளங்கிற்று. அவர் எங்களைப் பார்த்து " திரை மறைவில் விசாரிக்கப்பட்ட இந்த வீட்டு அம்மாமார்களை நான் கண்ணாலே பார்க்க வேண்டியது முக்கியமாயிருக்கிறது. அவர்களை நான் பார்க்கலாமா என்று கேட்டார். உடனே சம்பந்தி முதலியார் அவரை நோக்கி " உங்களைப் பார்த்தால் மகா உத்தம புருஷராகத் காணப்படுகின்றது. நீங்கள் எங்களுடைய பெண்டுகளைப் பார்க்கத் தடையில்லை " என்று சொல்லி ஞானாம்பாளையும், ஆண்டிச்சி அம்மாளையும் அழைத்துக்கொண்டு வந்து அவர் முன்பாக விட்டார். அவர்

ஞானாம்பாளை அதிகமாய்க் கவனிக்க வில்லை. ஆண்டிச்சி அம்மாளை மட்டும் அதிக கவனமாக உற்றுப் பார்த்தார். அந்த அம்மாளும் அவரைச் சற்று நேரம் உற்றுப் பார்த்து " ஆ என் பிராண நாயகரே" என்று அலறிக்கொண்டு அவருடைய பாதத்தில் விழுந்தார். உடனே அவர் அவளை வாரித் தூக்கி இந்தப் பஞ்சைக் கோலத்தோடு, உன்னைப் பார்க்கவா வந்தேன்? என்று கண்ணீர் மழை சொரிந்தார். அவருடைய துக்கம் சிறிது மாறி பிற்பாடு அவர் எங்களைப் பார்த்து இவள் என்னுடைய பத்தினி இவளை நான் திரைமறைவில் விசாரித்தபோது, என் பெண்சாதியினுடைய குரலாயிருந்தபடியால், அவளை நான் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இவள் என் பெண்சாதி என்பது நிச்சயந்தான் எங்களுடைய சரித்திரத்தைக் கேள்விப்பட்டீர்களா? என்றார். நாங்கள் கேள்விப்பட்டோம் என்றோம். அவர் எங்களைப் பார்த்துச் சொல்லுகிறார். நான் இவளைப் பிரிந்த பிறகு பல தேசங்களுக்குப் போய் சத்துருக்களுடன் யுத்தஞ் செய்தேன். ஆரம்பத்திலே கொஞ்சம் அபஜயம் நேரிட்டாலும் அந்தத்தில் விஜயலட்சுமி எங்கள் பங்கில் இருந்தாள். நான் சிலநாள் வரைக்கும் இவளுக்குக் கடிதங்கள் அனுப்பிக் கொண்டு வந்தேன் மத்தியில் நான் குண்டுபட்டு, நெடுநாள் வைத்திய சாலையில் இருந்தபடியால் கடிதம் எழுதத் தப்பிப்போய் விட்டேன். அப்போது நான் பிழைப்பேனென்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. நான் இறந்துபோனதாகவும், எங்கும் பிரஸ்தாபமாகி விட்டது. நான் இந்தத்தடவை பிழைத்தது புனர்ஜன்மந்தான். நான் சண்டைமுடிந்து திரும்பி வந்தவுடனே கவர்ன்மெண்டார் என்னுடைய சௌரியத்தை மெச்சிக்கொண்டு எனக்குச் சேனாதிபதி உத்தியோகம் கொடுத்தார்கள். என்னுடைய பெண்சாதி பிள்ளைகளைப் பார்க்கும் பொருட்டு, நான் உத்தரவு பெற்றுக்கொண்டு புதுச்சேரிக்குப் போனேன். அங்கே என் பிள்ளை காணாமற்போனதாகவும், அவனைத் தேடிக்கொண்டு போன என்னுடைய மாமனாரும் திரும்பி வரவில்லையென்றும் அந்தச் சமயத்தில் நான் இறந்துபோனதாகச் சமாசாரம் வந்தபடியால் இவள் சித்தம் பேதித்து நெடுநாள் வியாதியாயிருந்ததாகவும் பிற்பாடு இவள் போன இடம் தெரியவில்லையென்றும் கேள்விப்பட்டு நான் பட்ட துயரம் இவ்வளவென்று சொல்லிமுடியாது. நான் சண்டையில் மாண்டுபோகாமல் இந்தத் துக்கங்களை அனுபவிக்கவா வந்தேனென்று புலம்பிக்கொண்டு பல ஊர்களைத் தேடிப்பார்த்து வரும்போது, வழியில் எனக்கு இஷ்டமான ஒரு கலெக்டரைப் பார்க்கப்போனேன். அவர் தம்முடைய தாசில்தாரை நீங்கள் கொலை செய்துவிட்டதாகவும், நீங்கள் பலவான்களானதால் அநேகம் போர்வீரர்கள் சகிதமாய்ப் போய், உங்களைப் பிடித்து விசாரித்துச் சங்கதிகளைத் தெரிவிக்கும்படியாகவும் உத்தரவு கொடுத்தார். அதற்காக நான் வந்த இடத்தில் தேடிப்போன மருந்து காலில் அகப்பட்டதுபோல், என் பெண்சாதி அகப்பட்டாள். அவள் அகப்படுவதற்கு முன் யார் போனாலும் போகட்டும் பெண்சாதி அகப்பட்டால் போதுமென்று நினைத்தேன். அவள் அகப்பட்டபிறகு பிள்ளையும், மாமனாரும் அகப்படவில்லையே என்கிற ஏக்கம் பெரிதாயிருக்கிறது. மனுஷனுடைய புத்தி ஒன்றிலும் திருப்தி அடைகிறதில்லை என்பதற்கு நானே சாட்சியாயிருக்கிறேன் என்றார்.

துறை செய்திகள்.

1—1—1991 முதல் 31—3—1991 முடிய உள்ள காலத்திற்கான துறை செய்திகள் தமிழ்நாடு ஆவணக் காப்பகம், எழும்பூர், சென்னை-8.

1.1991—91 ஆம் ஆண்டிற்கு பின்வரும் நபர்கள் உதவி ஆணையராகத் தற்காலிக நியமனம் செய்து அரசு தமது அரசாணை நிலை எண். 328, கல்வி (டபிள்யூ-1), நாள் 11—3—1991-ல் ஆணை வெளியிட்டுள்ளது.

1. திருமதி எச். அம்மணி, ஆராய்ச்சி அலுவலர் மாவட்ட ஆவணக் காப்பகம், கோவை.
2. திரு. வி. ராமகிருஷ்ணன் கண்காணிப்பாளர் (நிலை-ஏ), தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை-8.
3. திரு. வி. வி. விஜேந்திரன் .. கண்காணிப்பாளர் (நிலை-ஏ), தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை-8.

2. அரசாணை வாலாயம் எண். 871 பொது (ஸ்பெஷல்-ஏ) துறை, நாள் 16-3-91-க்கிணங்க, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன், இ.ஆ.ப., தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி இயக்குநராக 25-3-1991-ல் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஆவண மேலாண்மைப் பயிற்சி, பயிற்சியளிக்கப்பட்ட விவரம் :

21-1-1991 முதல் 1—3—1991 முடிய 84-ஆம் அமர்வில் 20 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

மாவட்ட ஆவணக் காப்பகங்கள் :

1. சேலம் :

சேலம் மாவட்டத்திலுள்ள, வட்டாட்சியர் திருச்செங்கோடு அலுவலகம், ஊராட்சி ஒன்றியம் ஏற்காடு அலுவலகங்களிலிருந்து 383 எண்ணிக்கை நிலை முடிவு, ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டது. இக்குறிப்பிட்ட காலாண்டில் 1,550 தாட்கள் செப்பனிடப் பட்டன. மாவட்ட ஆட்சியர், சேலம் அலுவலகத்தின் 1930-ஆம் ஆண்டு பொருளடக்க அட்டவணை பரிசிலனை செய்யப்பட்டு, அவ்வாண்டிற்கு பொருளடக்க அட்டவணை எழுதப்பட்டது.

2. மதுரை :

1982-ல் இக்காப்பகம் துவக்கப்பட்டது முதல் 1990 ஆம் ஆண்டுவரை மதுரை மாநகராட்சி அலுவலகத்தின் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்று மற்றும் நிர்வாக முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள் மாற்றப்படாமலிருந்தன. 1990 ஆம் ஆண்டு இறுதியில் அவ்வலுவலக ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு இக்காப்பகத்திற்கு மாற்றத் தக்கவை தெளிவு செய்யப்பட்டன. அத்தகைய ஆவணங்கள் (1913 முதல் 1960 வரையிலான) 601 எண்ணிக்கை 8—3—1991 அன்று இக்காப்பகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டன.

இக்காலாண்டில் ஆவண மாற்றலின் குறியீட்டு அளவான 500 எண்ணிக்கைக்குக் கூடுதலான அதாவது மொத்தம் 837 நி.மு. ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டன.

இதுவரை இக்காப்பகத்தில் மாற்றப்பட்டுள்ள ஆவணங்களில் 18 அலுவலகங்களின் ஆவணங்களுக்கு பொருள விவர அட்டவணை தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளது. எஞ்சியுள்ள பணி தொடர்ந்து மேற் கொள்ளப்படுகிறது.

3. கோவை :

வரிசை எண்ணும், அலுவலகங்களின் பெயரும். (1)	பெறப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை. (2)
1. ஆணையாளர், மாநகராட்சி அலுவலகம், கோவை ..	2,600 எண்ணிக்கை.
2. காவல் துறை ஆணையாளர், கோவை மாநகர், கோவை ..	214 ,,
3. வட்டாட்சியர், அவிநாசி, கோவை மாவட்டம்	108 ,,
4. துணை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, கோவை.	24 ,,
மொத்தம் ..	2,946 எண்ணிக்கை.

4. திருச்சி.

இக்காலாண்டில் கூர்ந்தாய்வு செய்வதற்காக் எடுத்துக்கொண்ட ஆவணங்களின் எண்ணிக்கை.	5,718
கூர்ந்தாய்வு செய்து தேர்ந்தெடுத்த ஆவணங்களின் எண்ணிக்கை.	531
தேவையில்லாதது என திருப்பி அனுப்பப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை.	5,187

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆவணக் காப்பகத்தில் கையகப்படுத்தி மையப்படுத்த பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களின் விரங்கள் :—

1. நி.மு. எண். 724/34 :

இந்திய விடுதலைக்கு உழைத்த உத்தமர்களுள் ஒருவராகிய டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையார் திருச்சிக்கு 23—11—1927-ல் வருகை தந்தபோது திருச்சி நகர சபை அவரை வரவேற்று பாராட்டி வாசித்தளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க கவிதை வரிகள் கொண்ட வரவேற்புப் பத்திரம் இந்த ஆவணத்தில் கிடைத்துள்ளது.

2. நி.மு. எண். 740/34 :

பெங்களூரில் இருந்த காந்தி அடிகளுக்கு அவர் சேலம் வருகை தருவதை அறிந்து திருச்சிக்கும் வருகை தந்து ரூ. 5 லட்சம் செலவில் புதுப்பிக்க இருக்கும் திருச்சிராபுரம் கோட்டை மார்க்கெட்டிற்கு அடிக்கல் நாட்டி சிறப்பிக்க வேண்டும் என்று திருச்சி நகரசபை டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் மூலம் 16—8—1927-ல் வேண்டுகோள் விடுத்ததும் மகாத்மாவின் ஒப்புதல் பெற்றதும் முன்னர் கோட்டை மார்க்கெட் என்றிருந்ததை பெரிதாகப் புதுப்பித்து "காந்தி மார்க்கெட்" என்று பெயரிட்டுச் சிறப்பிப்பதற்காக 17—9—1927-ல் மகாத்மா காந்தி அவர்களால் அடிக்கல் நாட்டச் செய்யும் விழாவிற்கான அழைப்பிதழும் நிகழ்ச்சி நிரலும் மகாத்மாவுக்கு திருச்சி நகரசபை வாசித்தளித்த வரவேற்புப் பத்திரமும் இந்த ஆவணத்தில் உள்ளன.

வரவேற்புப் பத்திரத்தில் வரலாற்று நாயகர் தேசப்பிதா மகாத்மாவின் கொள்கைகளை பணிகளைப் பாராட்டியுள்ள வார்த்தைகளும் வரிகளும் வான்புகழ் கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. சுதந்திரம் எப்போது கிடைக்கும் என்ற நிச்சயம் எதுவுமற்ற அந்நாளில் சுதந்திரம் கிடைப்பதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் திருச்சி நகரசபையினால் எழுச்சியும்—முயற்சியும்—துணிவும் அதாவது அரசிடம் மார்க்கெட் அமைக்க ரூ. 5 லட்சம் கடன் பெற்று அந்த மார்க்கெட்டிற்கு காந்தி பெயரைச் சூட்டி காந்தியின் திருக்கரங்களாலேயே அடிக்கல்லையும் நாட்டச் செய்துள்ள தீரமிக்க செயல் வரலாற்றுச் சிறப்பு மிக்கச் செயல்களில் வரலாறு படைத்த தனிச் சிறப்பு வாய்ந்தது ஆகும்.. வரவேற்பு மடலின் பத்திகள் :

பா
ர
த
மா
தா
ப
த
பே
க
தி

என்று தமிழ்ப்பற்றும் தேசப்பற்றும் மிக்க கோஷம் எழும் வகையில் மிகவும் சாமர்த்தியமாக அறிவு—உணர்வு—தேசபக்தி வெளிப்படும் விதமாக அற்புதமாச அமையப் பெற்றுள்ளன.

3. நி.மு. எண். 1254/34 :

1930-ல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை—சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்தியதற்காக கைது செய்யப்பட்டு விசாரணை எதுவுமின்றி சிறையில் அடைக்கப் பட்டதைக் கண்டித்து—

திருச்சி நகரசபை
தீர்மானம் நிறைவேற்றியது
பள்ளிகள் - நகரசபை
அலுவலகம்

ஆகியவற்றை 13-6-1930-ல்
மகாத்மாவிற்கு அனுதாபமும்
ஆதரவும் தெரிவிக்கும்
அடையாளமாக மூடச் செய்தது

ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க விவரங்கள் இந்த ஆவணத்தில் உள்ளன.

இவற்றை எல்லாம் கண்டித்தும் எச்சரித்தும் விடப்பெற்று அரசு அறிக்கை கொண்ட அரசாணை எண். 2414 எல். அண்ட் எஸ். நாள் 17—6—1930 இதில் பதிவு செய்யப் பட்டும் உள்ளது.

4. நி.மு. எண். 425/35 :

1884-ல் தென்னிந்திய ரயில்வே திருச்சியில் அதன் தேவைகளுக்காக காவேரியில் இருந்து தண்ணீர் பெறும் திட்டம் ஒன்றை கல்கத்தாவைச் சேர்ந்த திரு. ஓல்தாம் என்பவர் தயாரித்தும்—இதனை திருச்சி நகரசபை சுகாதாரத் துறைப் பொறியாளர் திருச்சி நகரத்திற்கும், ராணுவத்தினருக்கும், சிறைத்துறைக்கும் குடிநீர் கிடைக்கும் விதமாகத் திருத்தி அமைத்தும்—மேற்படி திட்டத்தை அரசு 1888-ல் ஒப்புதல் அளித்தும்—குடிநீர் திட்டச் செலவாக ரூ. 4,44,245-ஐ நகரசபை, ரயில்வே, ராணுவம் மற்றும் சிறை ஆகிய துறைகள் முறையே ரூ. 3,66,535, ரூ. 51,623, ரூ. 20,061, ரூ. 6,126 என்ற வகையில் ஏற்றுக் கொண்டதையும் கழிவுநீரை வெளியேற்றும் செலவினத்தையும் மேற்படி துறைக்காக நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் ஏற்றுக்கொண்டதையும் மேலும்—குடிநீர் பெற நிலத்தடி நீர், கிணற்று நீர் இன்னும் பல வழிமுறைகள் மூலம் கழிவுநீர் அகற்ற திட்டப்பெற்ற திட்டங்கள் பற்றியும் தொலை நோக்கில் மிகவும் விரிவாகத் திட்டமிடப்பட்ட விவரங்கள் அடங்கிய அறிய ஆவண ஆகும்.

5. நி.மு. எண். 3669/43 :

திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் தாலுகாவில் உள்ள உலக வரலாற்றுப் புகழ் மிக்க கங்கைகொண்ட சோழபுரத்தில் பிரகதீஸ்வரர் கோயிலில் இருந்து பாழடைந்த உபயோகமற்றது என்று கருதப்பட்ட பலவித அமைப்புகள் கொண்ட கருங்கற்களை லோயர் அணைக்கட்டு கட்டுவதற்காக அகற்றப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட்டு அதனை உடன் தடை செய்யுமாறும்—

பாதுகாக்கப்பட வேண்டிய புராதன சிறப்பு மிக்கது என்ற பட்டியலில் மேற்படி வரலாற்றுப் பின்னணி கொண்ட கோவிலைச் சேர்க்கும்படியும் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் அறிவித்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆவணமாகும்.